223

15.11.56

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



MADRAS

122
4-56

-2-

# செய்திகள்

## மூவா மருந்து

விஞ்ஞானிகள் எல்லாம் இன்னமும் தேடிவரும் அருமருந்து ஒன்று எங்கே கிடைக்கிறது, தெரியுமா? ராணித் தேனீ இருக்கிறதே, அதனிடத்தில்தான். என்றும் இளமையைத் தரும் 'காயகல்ப' ரசம் ராணித் தேனீயின் பிசினில் இருக்கிறதாம். அந்தப் பிசினில் சிகிச்சை செய்து கொண்ட கிழவர்கள், வாலிபர்களைப்போல் முறுக்காக இருக்கிறார்களாம். அந்தப் பிசினை முக மெழுகாக உபயோகித்தால் பாட்டியம்மாள்கூடப் பால்யமாகிவிடுகிறாளாம். பன்றிகள், எலிகள் இவற்றின் ஆயுட் காலம் அரை மடங்கு அதிகமாகி விடுகிறதாம். கிரீஸ் நாட்டில் உள்ள தேனீ வளர்ப்பு நிபுணர் ஒருவரின் இந்தக் கருத்தை விஞ்ஞானிகள் சிலர் ஒப்புக் கொள்கிறார்கள்.

## அமெரிக்க ஜனாதிபதி

இந்த ஆண்டு அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை அமெரிக்க நாட்டுத் தேர்தல் நடைபெறுகிறது. குடியரசுக் கட்சியின் சார்பாக இப்பொழுது ஜனாதிபதியாக இருக்கும் ஐஸன்ஹோவரே மீண்டும் நின்று வெற்றி பெற்றிருக்கிறார். அவருடன் போட்டியிட்டவரின் பெயர் அட்லாய் ஸ்டீவன்ஸன். இவர் ஜனநாயகக் கட்சியின் சார்பாக நின்றவர்.

## கஸ்தூரி பாய் சங்கம்

இந்தச் சங்கத்தின் ஏழாம் ஆண்டு விழாவை முன்னிட்டு, சிறு கதைப் போட்டி, விளையாட்டுப் போட்டி, இசைப் போட்டி ஆகியவற்றை நடத்தப் போகிறார்களாம். 16 வயதுக்குட்பட்டவர்கள் கலந்துகொள்ளலாமாம். சிறுகதைப் போட்டியில் கலந்துகொள்பவர்கள் கண்ணன் அளவில், மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதவேண்டும். மற்ற விவரங்களுக்கு, கஸ்தூரிபாய் சங்கம், 3, நாட்டு சுப்பராய முதலித் தெரு, சென்னை-4 என்ற விலாசத்துக்கு எழுதிக் கேட்கலாம்.

## கைத்தொழில் பயிற்சி

எல்லாச் செகண்டரிப் பள்ளிகளிலும் அடுத்த பள்ளிக்கூட வருஷத்திலிருந்து கைத்தொழில் பயிற்சி கட்டாய பாடமாக்கப்படும் என்று தெரிகிறது. மர வேலை, நெசவுத் தொழில், விவசாயம், தோட்ட வேலை போன்றவை ஆண்களுக்கும், வீட்டுக் கைவேலைத் தொழில்கள் பெண்களுக்கும் போதிக்கப்படுமாம்.

## உலகத்திலேயே மிகக் கஷ்டமான வேலை

தினம் 50 முதல் 75 ஆயிரம் வரையில் கடிதங்கள், தந்திகள் வருகின்றன. அவற்றில் ஆயிரக்கணக்கில் உள்ள கடிதங்களை நேரடியாகப் படித்துப் பதில் விடுக்கவேண்டும். தினம் ஒன்றுக்கு 500 கடிதங்கள், முக்கிய பத்திரங்கள் இவற்றைப் படித்துக் கையொப்பம் இடவேண்டும். தினம் 50 அரசாங்க இலாகாக்கள், ஸ்தாபனங்களிலிருந்து வரும் அறிக்கைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். தினம் வெளிநாடுகளிலிருந்தும் உள் நாட்டிலிருந்தும் வரும் விருந்தினர்களையும் முக்கியஸ்தர்களையும் வரவேற்றுப் பேட்டி கொடுக்க வேண்டும். இதன் நடுவே வெள்ளம், அரசியல் குழப்பம் புயல், தேசீய முக்கிய நிகழ்ச்சி இவற்றைக் கவனிக்கவேண்டும். முக்கிய அதிகாரிகளை நியமிக்க முடிவு செய்யவேண்டும். உலகத்து நிகழ்ச்சிகளைக் கவனித்து, நடுநிலை பிறழாமல் நடந்துகொள்ள வேண்டும் - இத்தனையும் தினம் ஒருவர் செய்தாக வேண்டும் என்றால் நம்மால் அதை நினைக்கவே பயமாக இருக்கிறதல்லவா? இத்தனையையும், இது தவிரச் சுற்றுப் பிரயாணம், பிரசங்கம், கட்சி விவகாரங்கள் போன்ற இன்னும் எத்தனையோ பல அலுவல்களைக் கவனிக்கும் ஒருவர் நம்மிடையே இருக்கிறார். அவர்தாம் நம் இந்தியப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு!

கண்ணன்



## பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 22

15-11-'56

| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| கம்பி மத்தாப்பு | .. | 3 |
| மலர் மாலை | .. | 4 |
| சைனு சு - சூ! | .. | 5 |
| ராமரின் கருணை | .. | 10 |
| வேடிக்கைக் கணக்கு | .. | 12 |
| ஆசிரியர் அவர்களுக்கு | .. | 13 |
| திருடனின் தீபாவளி | .. | 16 |
| மிகப் பெரிய வெடி | .. | 20 |
| கண்ணீர் | .. | 24 |
| நல்ல கெமிஸ்டிரி | .. | 29 |
| புல் தின்னுக் குதிரை | .. | 32 |
| குழந்தைகள் தினம் | .. | 34 |
| புலிக்குட்டி | .. | 35 |
| பாலர் கவியரங்கம் | .. | 38 |
| ஆகாயமும் மேகமும் | .. | 39 |

அட்டைப் படம்:

N. ராமகிருஷ்ணு

செய்திகள் - 2-அட்டை

பேனு நண்பர்கள் - 3-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## வேடிக்கைப் புது மொழிகள்

அப்பளம் இல்லாச் சாப்பாடு
அரைச் சாப்பாடு!

காப்பி அடிப்பானேன்,
கண்டுவிட்டால் நடுங்குவானேன்?

அளவுக்கு மிஞ்சினுல்
அல்வாவும் நஞ்சாகும்!

ஆசை இருக்கிறது மந்திரியாக;
அதிருஷ்டம் இருக்கிறது 'டிபாவிட்' போக!

சொந்தக் குடையை இரவல் கொடுப்பானேன்,
சொட்டச் சொட்ட நனைந்து போவானேன்?

குற்றாலத்துக் குரங்கிற்கும்
கோவிந்தசாமி முகத்திற்கும்
என்ன சம்பந்தம்?

அணுக் குண்டுக்குப் பயப்படாத தேசமும்
அம்மாவுக்குப் பயப்படாத அப்பாவும் உண்டா?

அடியாத பையன்
படியாது வருவான்!

ஆனு ஆவன்னுத் தெரிந்தவன்
அரை எழுத்தாளன்!

சினிமாவே உலகம்!

கடன் கொடுத்தார் நெஞ்சம் போலக் கலங்கினுன்
இலங்கை வேந்தன்!

சட்டினி சரியில்லை என்று
பட்டினி கிடப்பது உண்டா?

மூசைத் தங்கம் வாங்கப் போனவன், வீசைக் கணக்கில் விலை கேட்டானும்!

சங்கீதம் எப்படி என்றதற்கு
வெங்காயம் விலை சொன்னுனும்!

—எ. ந. க.

# குழந்தைகளே!

கண்ணன் தீபாவளி மலர் மிகவும் சிறப்பாக அமைந்ததற்கு நீங்கள் தான் முழுதும் காரணம். இதை நான் மறக்கவில்லை. ஆகவே எனக்குக் கிடைத்த பாராட்டுக்கள் எல்லாம் உண்மையில் உங்களைச் சேர்ந்தவை தான். உங்களை மனத்தில் கொண்டுதானே மலர் வேலையில் உஷாராக இருக்கவேண்டி யிருக்கிறது! ஆகவே என் பாராட்டுக்களை உங்களுக்கெல்லாம் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருஷ முடிவு நெருங்குகிறது. ஏழு ஆண்டுகள் ஏற்றமுற முடிந்து, எட்டாவது ஆண்டில் கண்ணன் ஏறுநடை போடவிருக்கிறான். முற்றிலும் புதிய முறையில் கண்ணன் தோன்றும்படி விளங்கப் போகிறான். வளர்ச்சி, வளர்ச்சி, வளர்ச்சி! நீங்கள் எத்தகைய மாறுதல்கள், புதுமைகள் எல்லாம் கண்ணனில் வேண்டுமென்று எழுதினீர்களோ அத்தனை ஆயிரம் கடிதங்களையும் ஒன்று விடாமல் நான் படித்துப் பார்த்தேன். படித்ததைப் பற்றிச் சிந்தித்தேன். அறிஞர்களையும் கலந்து யோசித்தேன். அதன்படி ஒரு முடிவுக்கும் வந்தேன். அந்தப் புதிய மாறுதல்களை யெல்லாம் நீங்கள் புதிய வருஷத் தொடக்கத்திலிருந்து கண்ணனில் காணலாம். நீங்கள் பெரும்பாலோர் விரும்பும் பகுதிகளும், உங்கள் பெரும்பாலோருக்கு மிக மிக அவசியமான அம்சங்களும் கண்ணனில் இடம் பெறப் போகின்றன. புதிய தொடர்கதை ஒன்றும், பரிசுபெற்ற தொடர்கதை ஒன்றும் ஆரம்பமாகப் போகின்றன.

ஆம். தொடர்கதைப் போட்டியில் பலர் இந்த ஆண்டு கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கதைகளை இப்பொழுது பஞ்சாயத்தார்கள் படித்துப் பரிசீலித்து வருகிறார்கள். இன்னும் ஒரு மாதத்தில் அதன் முடிவை வெளியிட்டுவிடலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். டிசம்பர் 15-ஆம் தேதி இதழில் பரிசுப் போட்டி முடிவு வெளியாகும்.

பொங்கல் இதழை, அதாவது 1957 ஜனவரி 15-ஆம் தேதி இதழை, ஒரு மலர்போல விசேஷமாக வெளியிட எண்ணியிருக்கிறோம். பக்கங்கள் கூட இருந்தாலும், கதைகளும், படங்களும் அதிகமாக இருந்தாலும் விலையில் மாறுதல் செய்கிற எண்ணம் இல்லை. இரண்டே அணா விலையில் தான் அது இருக்கும். ஆனால் முழுநீளக் கதையும், தனிச் சித்திரக் கதையும் அதில் சேர்க்க எண்ணியிருக்கிறோம்.

கண்ணனை எல்லாம் ஈன்றெடுத்த தாய் போன்ற கலைமகள் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நாட்டில் பெருமையும் புகழும் பெற்று, திருவுடன் விளங்கும் கலைமகளின் வெள்ளி விழா வருகிற ஜனவரியில் நடக்கப் போகிறது. அதை முன்னிட்டே அதன் ஓர் அம்சமான கண்ணனும் தன் வாசகர்களாகிய உங்களை மகிழ்விக்க எண்ணுகிறான்.

வருஷ இறுதியானதால் சந்தாதார்களுக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். அவரவருக்குச் சந்தா தீர்ந்ததாகக் கடிதம் உடனுக்குடன் வந்துவிடும். அப்படி வந்ததுமே உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, பணத்தையும் அனுப்பிவிடவேண்டும். பணத்தை மணியார்டர் மூலமாக அனுப்பலாம்; போஸ்டல் ஆர்டராக வாங்கி, கிராஸ் செய்து அனுப்பலாம். அதை மறந்து விடாமல் ஞாபகப்படுத்தவே முன்னதாக எழுதுகிறேன். சந்தாதார்களுக்குக் கண்ணன் வெளியீடுகளில் ரூபாய்க்கு இரண்டணா கழிவு உண்டென்பது நினைவிருக்கும் என்று நம்புகிறேன்.

ஆசிரியர்



# கம்பி மத்தாப்பு

தமிழழகன்

பச்சைமஞ்சள் பூஉதிரும் கம்பி மத்தாப்பு;—பல
பலநிறமும் 'டால்' அடிக்கும் கம்பிமத்தாப்பு!

நட்சத்திரம் போலமின்னும் கம்பி மத்தாப்பு;—மறு
நாள்கிடைப்ப துறுதியில்லை கம்பி மத்தாப்பு! (1)

வானவில்போல் வண்ணவண்ணக் கம்பி மத்தாப்பு;—சோலை
வனமலர்ப்பூங் கதம்பம்போன்ற கம்பிமத்தாப்பு!

ஈனவாழ்வில் எண்ணம்போலும் கம்பி மத்தாப்பு;—வாங்கி
எல்லோருமே மகிழ்ந்திடுவீர் கம்பி மத்தாப்பு! (2)

பின்னுமுன்னும் சுழலுகின்ற கம்பி மத்தாப்பு;—வீட்டுப்
பேபிகையில் கொடுத்திடலாம் கம்பிமத்தாப்பு!

இன்னுமென்ன அக்காளுக்கும் கம்பி மத்தாப்பு;—அத்தான்
இருக்கையிலே நீட்டிடலாம் கம்பி மத்தாப்பு! (3)

பலகாரத் தினுசுபோல கம்பி மத்தாப்பு;—பொக்கைவாய்ப்
பாட்டிகூடச் சிரிக்கப்பண்ணும் கம்பிமத்தாப்பு!

அழகான ரகம்ரகமாய்க் கம்பி மத்தாப்பு;—விலையும்
அதிகமில்லை; வாங்கிடுவீர், கம்பி மத்தாப்பு! (4)

திருநாளும் பெருநாளும் கம்பி மத்தாப்பு;—கார்த்
திகை நாளும் ஒளிவிசும் கம்பிமத்தாப்பு!

புருஷர், பெண்டு, பிள்ளைகளே கம்பி மத்தாப்பு—மனம்
பூரிக்கக் கொளுத்திடுவீர் கம்பி மத்தாப்பு! (5)

# மலர் மாலை

அன்புள்ள கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு: நமஸ்காரம். இந்த ஆண்டு, 'கண்ணன்' மலரைப் பற்றித் தாங்கள் உண்மையாகவே பெருமைப்படலாம். தரத்தில் குறையாத மணிக் கதைகள் அத்தனையும். திருஷ்டி பரிகாரமாகக்கூட ஒரு கதையும் சோடையில்லை.

''நல்ல தோல்வி'' என்னும் கட்டுரை சிந்தித்துச் சிந்தித்து இன்புறும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது.

எருமைப் பால், புத்தி வந்த எருமை, சுவாமி காப்பார், உருமாறிய காசு, ஏழை மீனு, - யாவும் அமைதியான முறையில் தெளிவான கருத்துக்களுடன் அமைந்த பயனுள்ள கதைகள்.

இந்தத் தடவை அதிகப்படி விருந்தாக முழு நீளச் சித்திரக் கதையும் பரிசு பெற்ற வர்ணப்பட அநுபந்தமும் அளித்திருக்கிறீர்கள். பெரு மகிழ்ச்சி.

தினத்தாள் உருவாகும் விதத்தைப் படங்களுடன் விளக்கும் கட்டுரை அருமை.

தேன் சொட்டும் கவிதைப் பாடல்கள் மலர் வளத்தை எழிலோங்கச் செய்கின்றன என்பதில் ஐயமில்லை.

குறைகளே இல்லாத மலர் வெளியிடுவதற்கு ஓர் அரிய செயல் திறமை வேண்டும். மலரின் ஒவ்வொரு பக்கமும் அதைப் பறை சாற்றுகிறது.

—பி. கே. சாமி, தூத்துக்குடி.

* * * *

கண்ணன் மலர் பார்க்கப் பார்க்க இனிக்கிறது; படிக்கப் படிக்கச் சுவைக்கிறது. கண்ணன் மலர் ஒரு கரையாத கற்கண்டு!

—பூவண்ணன், சிந்தாதிரிப்பேட்டை.

* * * *

திரு கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

கண்ணன் தீபாவளி மலரைப் பற்றி என் கருத்துக்கள்.

அறிவு புகட்டுப் கதை, ஆற்றல் அளிக்கும் கதை, வேடிக்கைக் கதை, விநோதக் கதை, உண்மைக் கதை, ஊக்கமளிக்கும் கதை, மர்மக் கதை, நீதிக் கதை, பக்திக் கதை, பண்புக் கதை, திகைப்பூட்டும் கதை என்று எத்தனை விதக் கதைகள்! ஒவ்வொன்றும் படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேனாக இருக்கிறது.

பொழுது போக்குப் பகுதிகளை எத்தனை தடவை பாராட்டினாலும் போதாது. இந்தப் பகுதிகளைச் சிறுவர் உலகின் தூண்டுகோல் என்று சொல்வது மிகப் பொருத்தம்.

கண்ணன் சித்திரப் போட்டி கண்களுக்கு விருந்தாக அமைந்திருக்கிறது.

மலரைப் பற்றி ஒரே வார்த்தையில்:- பொருட்செலவைப் பாராது தாங்கள் தந்துள்ள இவ்வண்ணமலரைப் பாலர் முதல் பல்போன கிழவர் வரை படித்து இன்புறுவார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

—த. ஐயந்தி, குளித்தலை.

* * * *

'கண்ணன் தீபாவளி மலர்' மிகவும் நன்றாக அமைந்துவிட்டது. பெயருக்கேற்றபடி, ஆயர்குலக் கண்ணனைப் பாலர், சிறியோர், பெரியோர் யாவருமே தங்கள் கண்கள் பெற்ற பயனாகக் கருதி, கண்டு மகிழ்ந்தது போல், தங்கள் தீபாவளி மலர் குழந்தைக் குலத்தோரின் கண்களுக்கும் மனத்திற்கும் இன்பமூட்டும் முறையில் அமைந்துவிட்டது.

—எஸ். ரங்கநாயகி, சென்னை. 18.

[மலரைப் பாராட்டி நூற்றுக் கணக்கான கடிதங்கள் வந்திருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் தனித் தனியே பதில் எழுதுவது அசாத்தியமான படியால் பாராட்டியவர்களுக்கெல்லாம் எங்கள் மனங்கனிந்த நன்றியை இங்கே தெரிவித்துக் கொள்கிறோம். ஆ-ர்.]

# சைனு சுஜு



ஆர்வி

சீனனுக்குப் பின்புறத்தில் நின்ற உருவம் மெல்ல மெல்ல நெருங்கி வரத் தொடங்கியது. அவனுக்கு வாயை விட்டுக் கூச்சல் போடக்கூடத் தோன்றவில்லை. தொண்டையில் இரும்புக் கட்டை ஒன்று அடைத்துக்கொண்டது போல் இருந்தது. அவன் தன்னை யறியாமல் மெல்ல மெல்லப் பின் வாங்கினான்.

அந்த உருவம் பேசவில்லை; மிரட்டவில்லை. தலையிலிருந்து கால்வரை பெரிய கம்பளியால் மூடிப் போர்த்திக் கொண்டது போல் நெடிய தோற்றத்துடன் அது அவனுடைய வேகத்துக்கு இசைய முன்னேறி வந்தது.

சின்ன அறை; எவ்வளவுதான் பின்னால் போகமுடியும்? சீனன் திரும்பிப் பார்க்காமலேயே சுற்றிச் சுற்றி வந்தான். இனி, அதற்கும் வழியில்லை. அந்தப் பயங்கர உருவம் அவனை அசைய முடியாதபடி மூலையில் மடக்கிக் கொண்டு விட்டது. இரும்பு போன்ற அதன் கைகள் இரண்டும் அவன் கழுத்தைப் பற்றிவிட்டன.

''கிரீச்—''

உயிருக்குப் பயந்து ஓலமிட்டுக் கதறியது அவன் குரல். கழுத்தைப் பிடிக்க வந்த கை அவன் வாயை அடைத்து விட்டது.

அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். அடுத்த விநாடி அவன் வெட்டிச் சாய்ந்த மரமெனக் கீழே விழுந்து விட்டான். அப்புறம் அங்கே என்ன நடந்தது என்பது அவனுக்குத் தெரியாது.

* * *

அரை மணி நேரம் கழிந்திருக்கலாம். பறங்கிமலைப் பங்களாவின் கீழ்ப்புறத்தில் ஒவ்வொரு விளக்காகப் பொக்குப் பொக்கென்று எரியத் தொடங்கியது. சில விநாடிகளில் பகல் போல் எங்கும் பிரகாசமாகி விட்டது.

தடதடவென்று ஐந்தாறு பேர் கையில் தயாராகத் தடி-துப்பாக்கிகளுடன் மாடிப்படி ஏறிவந்தார்கள். நீல விளக்கின் மங்கிய வெளிச்சத்திலே ஷங்கங் காடாந்தகாரமான தூக்கத்தில் ஆழ்ந்து, இஷ்டப்படி குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்.

''தம்பி! குறட்டை! ஏ குறட்டை!'' என்று வந்தவர்களில் ஒருவர் ஷங்கங்கைக் குலுக்கி எழுப்பினார்.

பன்முறை மன்றாடிய பிறகும் அவன் எழுந்திருக்கும் வழியாகத் தோன்றாததால் அவர் சட்டென்று எதிரே இருந்த பீங்கான் குழாயில் கொஞ்சம் குளிர்ந்த தண்ணீராகப் பிடித்து வந்து, அவன் முகத்திலே 'சுள்' ளென்று அடித்தார்.

அவர் செய்த வேலை பலித்து விட்டது. உளறியடித்துக்கொண்டு, ஷங்கங் எழுந்துவிட்டான்.

''என்ன தம்பி! ஒண்ணும் தெரியாததுபோலப் பாசாங்கு செய்கிறாய்? மாஸ்டர் சீனன்

எங்கே?'' என்று அதட்டினர் வந்த மனிதர்.

இதற்குள் வேறு விளக்குகளும் எரியத் தொடங்கின. கூசிய கண்களைச் சுருக்கிக்கொண்டு ஷங்கங் அங்கிருந்தவர்களைப் பார்த்தான். அவர்கள் எல்லாரும் யார் என்று தெரிந்துவிட்டது. இன்ஸ்பெக்டர் துரைசிங்கமும் இன்னும் நாலைந்து போலீஸ்காரர்களும் அவனைச் சுற்றி நின்றுகொண் டிருந்தார்கள். அந்த நேரத்தில் அவர்களை யெல்லாம் அங்கே கண்டதும் அவனுக்கு ஒரே உதறல் எடுத்து விட்டது.

''பே பே பே பே'' என்று வாய் குளறத் தொடங்கியது. பேந்தப் பேந்த விழித்தான்.

''எங்கே, மாஸ்டர் சீனன்?''

''யாரு. .? சீனனு? . . அ. .அ. . அ. .ங்கேதானே. .ப. .ப. .,ப. . .ப . .'' தந்தியடிப்பதுபோல் அவன் வாய் ப-ப-ப என்று திக்கியது.

''யாருகிட்டே தம்பீ, இந்த வேலை யெல்லாம்? மரியாதையாக உண்மையைக் கக்கிவிடு. இல்லே. . முட்டி நொறுங்கிப் போகும். ஆமாம். .'' என்று அவர் அவனை மீண்டும் அதட்டினர்.

பாவம்! ஷங்கங் ஒன்றும் புரியாமல் விழித்தான். சீனனைக் காணவில்லை என்பது ஒரு புறமும் இன்ஸ்பெக்டரின் மிரட்டல் மறுபுறமும் அவனைக் கலங்க வைத்தன.

'ஸார்! எனக்கு ஒண்ணும் தெரியாது, ஸார்! நான் அப்போ படுத்தவன்தான், ஸார்! அப்புறம் என்ன நடந்தது என்று ஒன்றுமே தெரியாது, ஸார்!' என்று சொல்ல விரும்பினன். ஆனல் வார்த்தைகள் வந்தால்தானே?

இன்ஸ்பெக்டரோடு வந்த போலீஸ்காரர்கள் இதற்குள் மூலைக்கு ஒருவராக விளக்கைப் போட்டு அந்த மாடியை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

''என்ன தம்பீ, கேட்கிறேன். முழிக்கிறியே!'' என்று துரைசிங்கம் ஷங்கங்கின் கையைப் பிடித்துக்கொண்டு மிரட்டினபடி கைத்தடியால் அவன் முட்டியில் ஒன்று மாதிரிக்காகப் போட்டார்.

''ஐயோ!'' என்று அடியைத் தாங்கமுடியாமல் கத்தினன் ஷங்கங்.

''உம். .சொல்லு. .''

''எனக்குத் தெரியாது, ஸார்!''

''டேய், பொய்யா சொல்றே? உனக்குத் தெரியாமெயா இங்கே இவ்வளவும் நடந்திருக்கும்? மரத்தையே வெட்டி வழியிலே போட்டிருக்காங்க. அதுவரையிலேயா நீ தூங்கிக்கிட்டு இருந்திருக்கே! பொய் சொன்னியோ. . . .''

இன்ஸ்பெக்டர் தம் வார்த்தையை முடிப்பதற்குள் டெலிபோன் அறையினுள்ளிருந்து ஒரு ஜவானின் குரல் கேட்டது. ''இதோ! மயக்கமா அடிச்சு விழுந்து கிடக்குது. ஸார்!'' என்று அந்த அறையைச் சோதனை போடச் சென்ற போலீஸ்காரன் கத்தினன்.

எல்லாரும் ஓடிப்போய்ப் பார்த்தார்கள். சீனன் அங்கே ஒரு மூலையில் பிரக்ஞையின்றிச் சுருண்டு விழுந்து கிடந்தான். பேச்சு மூச்சு இல்லை; நினைவு, விழிப்பு இல்லை. எல்லாரும் சேர்ந்து ஆளைப் புரட்டிப் பார்த்தார்கள்.

துளிக் காயம்கூடப் படவில்லை. ஏதோ மயக்கமாக விழுந்து விட்டான் என்று மட்டும் தெரிந்தது. எதனுல் விழுந்தான். என்ன நடந்திருக்கும் என்பதொன்றும் தெரியவில்லை. உடனே டாக்டருக்குப் போன் செய்தார்கள். டாக்டர் வருவதற்குள் முதல் உதவி சிகிச்சை செய்ய முடியுமா என்று பார்க்க அவனைத் தூக்கி வந்து அந்தப் பெரிய மஞ்சத்தில் கிடத்தினர்கள். ஷங்கங், சீனன் இருந்த நிலையைப் பார்த்து விட்டு, 'ஹோ-ஹோ!' என்று பயந்துபோய் அழுதான்.

''டேய்! சும்மா இரு. கலாட்டா செய்தாயோ, புடிச்சு வெளியிலே தள்ளச்சொல்லிவிடுவேன். துணைக்கு ஆள் வேணுமானு உன்னைப்போன்ற ஆளைத்தான் கொண்டுவந்து வைத்துக் கொள்ளணும்! தூங்கு மூஞ்சி'' என்ருர் இன்ஸ்பெக்டர்.

''மாடி அறையில் எதுவும் கலைக்கப்படவில்லை. எல்லாம் வைத்தது வைத்தபடியேதான் இருந்தது'' என்று வாட்சுமேன் கூறினன்.

''ஆமாம்; நீ இதுவரையில் எங்கே இருந்தே!'' என்றார் இன்ஸ்பெக்டர் அவனைப் பார்த்து.

''கீழேதான் டியூட்டி பார்த்துக்கிட்டிருந்தேன். அப்புறம் என்ன ஆச்சோ தெரியல்லே. அப்படியே படுத்துத் தூங்கிட்டேன். நீங்க வந்தப்போ தான் முழிச்சுக்கிட்டேன்!'' என்றான் வாட்சுமேன்.

''சரியான ஆளுங்களாக வந்து சேர்ந்தீங்க, அப்பா! ஒரே தூங்கு மூஞ்சிப் பட்டாளமாக! இதுதான் நீ பங்களா காவல் பாக்கற லட்சணமா?'' என்றார் துரைசிங்கம்.

வாட்சுமேன் பொன்னுரங்கம் பதில் சொல்ல வழியில்லாமல் மலங்க, மலங்க விழித்தான். இத்தனை நாளாக அவன் இந்த மாதிரி ஒரு நாளும் ஏமாந்துபோய்த் தூங்கியது இல்லை. இன்று இருந்த அஜாக்கிரதையால் நேர்ந்த ஆபத்தை எண்ணி அவன் நடுங்கினான். இதனால் தன் வேலைக்கே மோசம் வந்துவிடுமோ என்று அவனுக்குப் பயமாகவும் இருந்தது.

மரம் விழுந்து கிடந்ததால் காரைச் சாலையிலேயே விட்டுவிட்டு டாக்டர் நடந்து வந்தார். கைச்சுருக்காக அவர் சீனனுக்கு முதலில் செய்ய வேண்டிய வைத்திய உபசாரங்களைச் செய்தார். விடியற் காலை நாலு மணிவரையிலும் அவனுக்கு மூர்ச்சை தெளியவே யில்லை. அதற்குமேல்தான் அவன் உடலில் ஒரு சலனம் உண்டாயிற்று. எல்லாருக்கும் அதற்கு மேல்தான் டாக்டரின் சிகிச்சையில் ஒரு நம்பிக்கையும் தோன்றியது. ஷங்கங் சீனனுக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். அவன் எத்தனையோ தைரியசாலிதான். ஆனால் தெருவில் பிளாட்பாரத்தில் கிடந்தவரையில் தான் அந்தத் துணிச்சல் எல்லாம் இருந்தது. இப்போது, எதற்கெடுத்தாலும் பயம்தான் அவனுக்கு முன்னால் வந்து நின்றது. பணம் வந்துவிட்டால் பயமும் எங்கே என்று காத்திருக்குமோ, என்னவோ!

* * *



அயர்ந்து தூங்கி விழித்தவன் போல் சீனன் கண்களை மெல்லத் திறந்து பார்த்தான். தலை ஏதோ கனமாக இருப்பதுபோல் இருந்தது. விளக்குகளின் பிரகாசம் அவன் கண்களைக் கூச வைத்தது. எங்கே இருக்கிறோம் என்ற நினைவின்றி அவன் தன்னைச் சுற்றி ஆவலுடன் நிற்கும் போலீஸ்காரர்களையும் டாக்டரையும் பார்த்தான். ஷங்கங் கண்களில் கண்ணீர் வடிய, ஆனந் தம் தாங்காமல், ''சீனு! சீனு!'' என்று முணுமுணுத்தான்.

சீனனுடைய கண்கள் சுற்று முற் றும் அலைந்தன. வாயிலிருந்து பேச்சு எழும்பவில்லை. இவர்கள் எல்லாம் எங்கே, எதற்காக, எப் போது வந்தார்கள் என்று கேட் பதுபோல் இருந்தது அவனுடைய பார்வை.

டாக்டர் கண்டிப்பாக எச்சரித் திருந்தார். ஒருவரும் அநாவசிய மாகச் சீனனிடம் பேச்சுக் கொடுக் கப்படாது என்று.

அதனால் ஒருவரும் பேசவில்லை. சீனன் சற்றுப் பொறுத்துக் கட்டி லில் எதையோ பார்க்க முயன் றான். அவன் பார்க்க விரும்பிய பொருள் அவன் கண்ணில் பட வில்லை. திடீரென்று தன் பலவீ னத்தையும் மறந்து, தலையணைக்குக் கீழே, பக்கத்தில், எங்கும் கையை விட்டுத் துழாவினான். வர வர அவன் முகத்தில் பீதி ஒன்று பரவத் தொடங்கியது.

டாக்டர் மட்டும் மெல்ல, ''தம்பி, என்ன தேடுகிறாய்?'' என்று பக்குவமாக விசாரித்தார்.

''என் சு-சூ பெட்டி! தோல் பெட்டி! எங்கே அது?'' என்று கேட்டான் அவன்.

எல்லாரும் தேடினார்கள். எங்கும் தேடினார்கள்- ஓரிடம் பாக்கியின் றித் தேடினார்கள்: அது கிடைக் கவேயில்லை. படுக்கை, கட்டில், டெலிபோன் அறை எங்கும் ஆராய்ந்து பார்த்துவிட்டார்கள். அது பறந்தோடிப் போனதுபோல் மறைந்துவிட்டது.

''எங்கே? எங்கே?''

''காணோம், காணோம்!''

இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் சந்தேகக் கண்களோடு பங்களா காவற்காரனையும், பாரா போட் டிருந்த போலீஸ்காரனையும் பார்த் தார். அவர்கள் இருவரும் அறியா மல் ஒன்றும் நடந்திருக்காது என்று அவருக்குத் தோன்றியது.

சீனன் தவிக்கிற தவிப்பைப் பார்த்து ஒருவருக்கும் தைரியமாகப் பேசத் தோன்றவில்லை. அவனுக்கு வேண்டுமானால் தன்னுடைய உயர்ந்த அந்தஸ்து ஞாபகத்தி லேயே இல்லையே தவிர, மற்றவர் கள் எல்லாரும் அதே நினைவுடன் தான் இருந்தார்கள். விரலை அசைத்தால் ஊரே நடுங்கும்படிச் செய்யக் கூடிய வசதியும் வாய்ப்பும் சீனனுக்கு இப்போது இருந்தன. பெரிய கோடீசுவரன் அவன் இப் போது. பொதியமலைச் சாரலிலும் உதகையிலும் அவன் பங்குக்கு இப்பொழுது எத்தனையோ தேயிலை, காபித் தோட்டங்கள் இருந்தன. பங்குகள் இருந்தன. முக்கியமான சுகவாச ஸ்தலங்களில் அவனுக்குப் பங்களாக்கள் இருந்தன.

பாங்கிலே லட்சம் லட்சமாகப் பணமும் ஏராளமான பங்குகளும் இருந்தன. இது தவிர, சிங்கப்பூரி லும் பல சுரங்கங்களிலும் ரப்பர்த் தோட்டங்களிலும் அவன் முதல் பெரிய அளவில் இருந்தது. ஆம்; அவ்வளவும் கிழவர் வைத்திருந்த சொத்துதான். சீன னுக்கு அதன் அளவைக் கூட்டிப் பார்க்கக் கூடத் தெரியாது. கிழவ ருக்கு வாரிசு என்றால் எத்தனை பெரிய ஆஸ்திக்கு எஜமானன் என் பதை அவனுக்குக் கற்பனைகூடச் செய்யத் தெரியாது. ஆனால் மற்ற வர்களுக்குக் கூடவா மறந்து போகும்? இன்ஸ்பெக்டர் துரை சிங்கத்துக்குக் கிழவரைப் பற்றித் தெரியும். ஒரு சுதேச ராஜா மாதிரி அவர். நினைத்தால் ஒரு ஊரையே அவரால் விலைக்கு வாங்க முடியும் என்று அவர் கேள்விப்பட் டிருக்கிறார். அவருடைய சொத் துக்கு இந்தப் பையன்தான் இன்று புதிய எஜமான் என்றால் அவன் தயவு அவருக்கு வேண்டாமா? அவனுக்கு எதிர்த்தாற் போல் இல்லாத அட்டகாசமெல்லாம்



பிறகு, 'தர்ட்டி தர்ட்டி' என்ற ஜவானைப் பார்த்து, ''யாரு மேன், இந்த மாடியிலே பாரா இருந்தது?'' என்று அதட்டினார்.

''நான் இல்லீங்க!'' என்று குழைந்து உளறினான் தர்ட்டி தர்ட்டி.

''பின்னே நீயில்லாட்டி வேறு யாரு?''

''இவன்தாங்க! ஹன்டிரட் அண்டு லெவன்!'' என்று ஒருவனைச் சுட்டிக் காட்டினான்.

''டேய்! டேய்! என்ன அப்பாய், டபாய்க்கிறே! நானா இருந்தேன்?.. இல்லீங்க ஸார்! இவனும் இருந்தான், ஸார்!''

''நான்தான் உனக்கு முந்தியே தூங்கிட்டேனேடா!'' என்று தர்ட்டி தர்ட்டி முந்திக்கொண்டு சமாளிக்கப் பார்த்தான்.

''நானுந்தான் உன்னோடேயே தூங்கிட்டேனே அப்பாய்!'' என்றான் நூற்றுப் பதினொன்று.

''இல்லே, நீ முளிச்சிக்கிட்டு இருந்தே?''

''இல்லே நீதான்?''

''இல்லவே இல்லே, நீயேதான்!''

''இல்லவே...''

''ஷட்டப்! டேய், டு நாட் எயிட்! இரண்டு பேருக்கும் காப்புச் சங்கிலியைச் சேர்த்து மாட்டு. இங்கே வந்து போட்டி போட்டுக்கிட்டுத் தூங்கவா உங்களைப் பாரா போட்டது? ஹைங்?'' என்று இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் துள்ளிக் குதித்தார்.

செய்தார். அங்கே ஓடினார்; இங்கே ஓடினார். ''எங்கே?'' என்று கத்தினார். ''கொண்டுவா!'' என்று உறுமினார். இல்லாத ஆர்ப்பாட்டம் எல்லாம் செய்தார்.

''எனக்கு இந்த வாட்சுமேன் பேரில் நம்பிக்கை யில்லை. உத்தரவு கொடுங்க, தம்பி! அவனைப் பிடிச்சு ரிமாண்டிலே அடச்சு வைக்கிறேன்'' என்றார்.

வாட்சுமேன் வெடவெட வென்று குளிரில் நடுங்குபவன் போல் நடுங்கிக்கொண்டிருந்தான். சினன் ஒன்றையும் மனத்தில் வாங்கிக் கொள்ளாமல் தயங்குவதைப் பார்த்து, ''டேய், டு நாட் எயிட்! அந்த ஆளுக்கு நம்ப காப்பை மாட்டி வை!'' என்றார்.

(தொடரும்)

# ராமரின் கருணை

கி. தாமோதரன்



கோதாவரி நதிக் கரையிலே ஓர் அடர்ந்த காடு. அதன் நடுவிலே லட்சுமணன் அமைத்திருந்த அழகிய பர்ண சாலையிலே ராமரும் சீதையும் வசித்து வந்தார்கள். ராமரின் குடிசையைச் சார்ந்து பல முனிவர்கள் ஆசிரமத்தை அமைத்துக் கொண்டு, தவம் செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள். தவத்துக்கு இடையூருக ராட்சசர்கள் வந்து விடுவார்களோ என்ற பயம் இப்பொழுது சிறிதும் அவர்களுக்கு இல்லை.

ஒரு நாள் ஒரு முனிவர் சேமித்து வைத்திருந்த யாகத்துக்கு வேண்டிய பொருள்களுக்கு எல்லாம் நெருப்பு வைத்து அதன் அருகே குளிர் காய்ந்துகொண்டிருந்தான் ஒரு ராட்சசன். காலையில் ஸ்நானம் செய்துவிட்டு ஆசிரமத்துக்குத் திரும்பி வந்த அந்த முனிவர் இதைக் கண்டு திடுக்கிட்டார்.

''ஏண்டா, உனக்கு இந்தப் புத்தி வந்தது?'' என்று ராட்சசனை அவர் அதட்டினர். அவன் அவரை லட்சியம் செய்யாமல், ''குளிரினுல் பல்லெல்லாம் நடுங்குகிறது. நான் என்ன செய்வேன்! உங்களுடைய தர்ப்பை, சமித்து இவைதான் எனக்குக் கிடைத்தன. என்னுடைய குளிரைப் போக்க அவை உதவுவதால் உங்களுக்குத் தானே புண்ணியம்'' என்று நியாயம் பேசினுன் ராட்சசன்.

''ஹே, ராமா! நாளைக்கு யாகம் செய்யவேண்டுமே! என் பொருள்களை மீட்டு, இந்த ராட்சசப் பயலைத் தண்டிக்கமாட்டாயா?'' என்று ஆத்திரத்தில் சத்தம் போட்டார் அந்த முனிவர்.

தொலைவில் கிழங்கை அகழ்ந்தெடுத்துக்கொண் டிருந்த ராமரின் காதில் முனிவரின் அபயக் குரல் விழுந்தது. கிழங்குகளைப் போட்டுவிட்டு அங்கே ராமர் ஓடினுர்; ராட்சசன் குளிர் காய்வதைக் கண்டு அவருக்குச் சிரிப்பு வந்தது. ஆனுல் அடக்கிக்கொண்டு வில்லில் அம்பைப் பூட்டி ராட்சசனின் மேல் பாணத்தைத் தொடுத்தார். ராம பாணத்துக்கு உயிர் தப்ப முடியுமா? ராட்சசன் ஒவென்று கதறி உயிர் நீத்தான்.

இந்த மாதிரி அவ்வப்போது முனிவர்களுக்கு இடையூறு நேரும் போதெல்லாம் ராமர் அங்கே சென்று முனிவர்களுக்கு உதவி செய்துவந்தார். பொல்லாத அரக்கர்களை வனத்திலிருந்து துரத்தினுர். பலரைக் கொன்றும் தீர்த்தார்.

ராமரின் குடிலுக்கு அருகிலே ஒரு வங்கிலே வெகு நாட்களாக ஒரு தவளை வசித்து வந்தது. அதற்குப் பெரிய குடும்பம். ஒரு நாள் அந்தத் தவளையின் கடைக் குஞ்சு காணுமல் போய்விட்டது. தவளையும் அதன் மனைவியும் எங்கே எல்லாமோ தேடியும் கடைக் குஞ்சைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மிக்க வருத்தத்துடன் இரவு நெடு நேரம் கழித்து இருவரும் வீட்டுக்குச் சென்றுர்கள்.

அடுத்த நாளும் அவர்கள் வீட்டில் ஒரு தவளைக் குஞ்சு காணுமல் போயிற்று. இதைக் கண்டு தவளை மிகவும் கலங்கியது. ஸ்ரீராமரிடம் சென்று முறையிட்டது. அவர் தவளையின் பொந்துக்கு அருகில் சென்றுர். அங்கே ஒரு பாம்பைக் கண்டார். தம் வில்லின் நாணைக் கொண்டே அதன் தலையை அறுத்து எறிந்தார்.

தவளைக் குடும்பம் ராமரின் கருணையை நினைந்து நினைந்து போற்றியது.

இது நடந்து இரண்டு, மூன்று மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் காட்டிலே ராமர் கிழங்குகளை அகழ்ந்து எடுத்துக்கொண்டிருந்தார்; லக்ஷ்மணன் பழங்களைப் பறித்த வண்ணமிருந்தார்: உச்சி நேரமாகிவிட்டது. குடிசைக்கு இருவரும் திரும்பத் தீர்மானித்தார்கள். பூமியில் கிடந்த தம்முடைய வில்லை எடுக்க ராமர் குனிந்தார். கீழே பூமியில் ஒரு பரிதாபமான காட்சியைக் கண்டதும் அவர் முகம் வாட்டமடைந்தது. "லட்சுமணா! பாவச் செயல் நிகழ்ந்து விட்டது! நமக்குத் தெரிந்த ஒருவருடைய உயிர் இதோ நம் எதிரே போய்க்கொண்டிருப்பதைக் கவனியாமல் இருந்து விட்டோமே" என்று வருத்தத்துடன் சொன்னார்.

"என்ன, என்ன?" என்று கேட்டுக்கொண்டே அங்கே லட்சுமணன் வந்து சேர்ந்தார்.

ராமருடைய வில், பெரிய தவளையை ஊடுருவிச் சென்றிருந்தது. அதன் நாண் தவளையின் கழுத்தைப் பாதிவரையில் அறுத்து விட்டது. துவண்டு கிடந்த அந்தத் தவளையைச் சுற்றி ஒரே ரத்த வெள்ளம். லட்சுமணன் அந்தக் காட்சியைக் கண்டதும் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டார்.

"ஏ, தவளையே! நான் இங்கே பக்கத்தில் கிழங்கை எடுத்துக் கொண்டுதானே இருந்தேன். என்னுடைய வில்லின் நாண் உன் தலையை அறுக்கும் பொழுது, நீ ஒரு குரல் கொடுத்திருக்கக் கூடாதா? ஓடோடி வந்து உன்னைக் காப்பாற்றியிருப்பேனே! 'ஒரு பாவமும் செய்தறியாத ஓர் உயிரை ராமனின் வில் கொன்றது' என்ற கெட்ட பெயர் எனக்கு வந்துவிட்டதே!" என்றார் ராமர்.

உயிர் போய்க்கொண்டிருக்கும் வேளையிலே திணறிக்கொண்டே பேசியது தவளை:

"ஹே, ராமா! எனக்கு வேறு யாராவது ஆபத்தை உண்டாக்கினால், 'ராமா! என்னை வந்து காப்பாற்றேன்' என்று உன்னை நினைந்து கூவுவேன். ஆனால் இந்தச் சமயத்தில் என்னால் அப்படிக் கூவ முடியவில்லையே. என் தலையை



"தாத்தா, அடுத்த வீட்டுத் தாத்தா வந்து உங்க பல்லை உடைச்சுடுவேன்னு சொன்னார், தாத்தா!"

"அதுதான் அவராலே முடியாது. பல் இருந்தாத்தானே?"

---

அறுத்தது உன்னுடைய பராக்கிரமம் பொருந்திய வில் அல்லவா? மறைந்தோ, நேரிடையாகவோ தெரியாமலோ. நீயே என்னைக் கொல்லும் போது இந்த மூவுலகில் நான் யாரிடம் போய் உயிர்ப் பிச்சை கேட்பது? யார்தான் எனக்கு அபயம் தரவல்லவர்கள்? என்னைத் தேற்றுவார் யார்?"

அதற்குமேல் மரண காயம் அடைந்த தவளையால் பேச முடியவில்லை. கண்கள் செருகிக் கொண்டன. தலை தொங்கி விழுந்தது.

ரத்தத்தில் கிடந்த தவளையை ராமர் எடுத்துத் தம் உள்ளங்கையில் வைத்துக்கொண்டார்.

ராமரின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் தவளையின் மேல் விழுந்து அதன் ரத்தத்தைக் கழுவியது. என்ன ஆச்சரியம்! மறுகணமே, தவளையின் ரணம் முற்றும் மறைந்து விட்டது. அது தத்திக் குதித்துக் கொண்டே வளையை நோக்கி ஓடியது.

# வேடிக்கை கணக்குகள்

6 4 7 5 = 15.
7 3 5 14 = 30.
5 3 8 8 = 24.
9 2 3 4 = 32.

இந்த எண்களுக்கு
இடையே + × −
என்று எந்தக் குறி
யீடுகள் தேவை?

1, 4, 2, 8, 5, 7 எண்ணை
2, 3, 4, 5, 6 ஆல்
பெருக்கினால்......




| | | | |
|---|---|---|---|
| | | | 24 |
| | | | 34 |
| | | | 32 |
| 30 | 24 | 36 | 26 |

2 முதல் 18 எண்கள்
கூட்டுத் தொகை
சரியாக வரவேண்டும்

எழுத்தால் எழுதி
முதல், இரண்டு,
மூன்றாவது எழுத்
தை வாசித்தால்..

10, 8, 8.
2, 5, 10.

ரகமி

விடை: 3-ஆம் அட்டை




# ஆசிரியர் அவர்களுக்கு...

கி. சாரங்கராஜன்

மதுரை.
7-5-1956.

'குழல்' பத்திரிகை ஆசிரியருக்கு,

நான் தங்கள் பத்திரிகைக்கு இது வரையில் பல கதைகளை அனுப்பியிருக்கிறேன். ஆனால் அவை ஒன்றுவது தங்கள் பத்திரிகையில் வெளிவந்தது இல்லை; திரும்பித்தான் வந்துகொண்டிருக்கின்றன. மற்றப் பத்திரிகைகளில் என் கதைகள் பிரசுரமாகியும் தங்கள் 'குழலி'ல் வெளிவராததன் மர்மம் என்ன? நிற்க-

நேற்று தாங்கள் என்னுடைய 'வளையும் தவளையும்' என்ற ஹாஸ்யத்தைத் திருப்பி அனுப்பிவிட்டீர்கள். அது தங்கள் காரியாலயத்தில் மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு வாசம் செய்து வந்தது. அதனால் அது நிச்சயமாக 'குழலி'ல் வருமென்று வைத்திருந்த நம்பிக்கையும் வீணாகிவிட்டது.

இன்று தபாலில், இக்கடிதத்தோடு, ''பாசமா, பாயசமா?'' என்ற கதையை அனுப்பியிருக்கிறேன். அந்தக் கதையைப் படித்துவிட்டு சீக்கிரமே திருப்பியனுப்புமாறு, தவறு, சீக்கிரமே தீர்ப்பு அளிக்குமாறு கோருகிறேன்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள
எழுத்தாளர் 'நாதம்.'

மதுரை.
12-5-1956.

'குழல்' ஆசிரியருக்கு,

என்னுடைய 'பாசமா, பாயசமா?' என்ற கதையைப் படிக்காமலே திருப்பிவிட்டீர்கள் என்று மூன்றாம் நாளே கதை என்னிடம் சரணடைந்ததிலிருந்து அறிகிறேன்.

'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறே, நானும் இன்று தபாலில் 'மேதாவி தாவினான்' என்ற கதையை அனுப்பியுள்ளேன். அக்கதையை நீங்கள் படித்துப் பார்க்கவாவது வேண்டும். சிறிது நாட்கள் உங்களிடமே வைத்துக்கொண்டிருங்கள். பரவாயில்லை.

இன்னொன்று. ரிப்ளைகார்டு இல்லாவிட்டால் நீங்கள் கடிதங்களுக்குப் பதிலளிப்பது வழக்கமில்லை போலிருக்கிறது. இத்துடன் ரிப்ளை கார்டு இணைக்கப்பட்டிருக்கிறது. கதையைப் படித்த பின்னர் எனக்குக் கதையின் முடிவை (பிரசுரிக்கிறீர்களா, இல்லை திருப்பியனுப்புகிறீர்களா என்பதைத்தான்) எழுத வேண்டுகிறேன்.

தங்கள்
'நாதம்'

சென்னை.
16-5-1956

அன்பார்ந்த 'நாதம்' அவர்களுக்கு

தாங்கள் அனுப்பிய கதை கிடைக்கப்பெற்றேன். அக்கதை விரைவில் பிரசுரிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்
'குழலன்.' ஆசிரியர்.

மதுரை.
18-5-1956;

அன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு,

ஆஹா! என்னே அற்புதம்! தாங்கள் 'மேதாவி தாவினுன்' என்ற கதையைப் பிரசுரத்திற்கு எடுத்துக்கொண்டீர்கள் என்று கண்டு, அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன். அதன் உயரிய கருத்துக்களையும், உணர்ச்சியான சம்பவங்களையும் படித்தால் உடனே நீங்கள் அதைப் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொண்டுவிடுவீர்கள் என்று நான் நினைத்தது சரியாகிவிட்டது!

மேற்கூறிய கதை 'குழலி'ன் எந்த இதழில் வெளியாகிறது என்று அறிய எனக்கு ஆவலாக இருக்கிறது. இக்கடிதத்துடன் இரண்டணு ஸ்டாம்பு வைத்திருக்கிறேன். நான் கேட்டுள்ள விவரத்தை எழுதி கவரில் அனுப்பவும். சிரமத்துக்கு மன்னியுங்கள்.

நன்றிகள் நாலாயிரம்.

'குழலி'ன் அன்பன்
'நாதம்'.
சென்னை.
20-5-1956.

அன்புடையீர்,

தங்கள் கடிதம் கிடைத்தது. அதிலிருந்து, தங்களுக்கு உள்ள சந்தோஷத்தை அறிந்து மெச்சுகிறேன்.

இப்பொழுது காரியாலயத்தில் சிறுகதைத்தொகுதி ஒன்று தயாராகிறது. அதில் தாங்கள் அனுப்பிய கதையும் இடம் பெறுகிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன்.

இப்படிக்கு,
குழல்குஞ்சு
உதவி ஆசிரியர்.

மதுரை.
23-5-1956.

அன்புள்ள ஆசிரியருக்கு,

என்னுடைய கதை 'குழல்' பிரசுராலயத்திலிருந்து வெளிவரும் கதைத்தொகுதியொன்றில் இடம் பெறும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறது என்று உதவி ஆசிரியர் மூலம் அறிந்தேன். என் மனத்தையறிந்து என்னுடைய அநுமதி அத்தியாவசியமில்லை எனத்தெரிந்து

## கிச்சுக் கிச்சு - புள்ளிச் சித்திரம்



கொண்டு கதைத் தொகுதியில் என் கதையையும் சேர்த்துவிட்டதற்குச் சந்தோஷம்.

இத்துடன் ஒரு வெற்றுக் கவர் அனுப்பியிருக்கிறேன். அதன் மூலம் கதைத் தொகுதி எப்பொழுது விற்பனைக்குக் கடைகளில் வருகிறது என்பதைத் தெரிவிக்கவும்.

தங்கள்
'நாதம்'.

சென்னை.
26-5-1956.

அன்புள்ள 'நாதம்' அவர்களுக்கு,

கதைத்தொகுதி வெளிவரும் நாளைப்பற்றி இவ்வளவு ஆர்வம் காட்டுவதற்கு நன்றி. 'கதைக் குவியல்' என்னும் அப்புத்தகம் வரும் முதல் தேதியன்று எல்லாக் கடைகளிலும் வெளியாக ஏற்பாடு செய்துள்ளோம். அதற்கு இரண்டு நாள் முன்னதாகவே வரும் 'குழல்' இதழில் விளம்பரம் வருகிறது. எனது அன்பளிப்பாகத் தங்களுக்கு ஒரு புத்தகம் அனுப்புகிறேன்.

இங்ஙனம்,
'குழலன்.'

மதுரை
28-5-1956.

திரு. 'குழலன்' அவர்களுக்கு,

ஐயா, ஏமாந்து விட்டீரே இதே கதை 1936-ஆம் வருஷம், 'வழிகாட்டி' என்ற பத்திரிகையில் தீபாவளி மலரில் பிரசுரமான கதை. அதை எழுதியவர் 'அருவி' என்பவர். தலைப்பை மாத்திரம் மாற்றித் தங்களுக்கு அனுப்பினேன். இக் கடிதம் தங்கள் கையில் இருக்கும் பொழுது 'கதைக்குவியல்' குழல் பிரசுராலயத்திலிருந்து வெளியேறியிருக்கும். இனித் தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது.

இக்கதை மூலம் தங்களை நன்கு கப் பழி வாங்கிவிட்டேன். இனி எத்தனை கதைகளை வேண்டுமானாலும் திருப்பியனுப்புங்கள்; கவலையில்லை.

தங்கள் திண்டாட்டம் என்றன் கொண்டாட்டம்!




இப்படிக்கு
நகைக்கும் 'நாதம்.'
சென்னை
29-5-1956.

'நாதம்' அவர்களுக்கு,

கடைகளுக்குக் 'கதைக்குவியல்' முதல் தேதி யன்றுதான் வரும். ஆனால் 30-ஆம் தேதியே எனது அன்பளிப்பாக உமது கையில் அது தவழ்ந்துகொண் டிருக்கும்! இக் கடிதத்துடன் கூடவே 'கதைக் குவியலை'யும் அனுப்புவதால் இந் நேரம் அது தங்கள் கையிலிருக்கும். கொஞ்சம் திறவுங்கள் அதை; படியுங்கள் என் முன்னுரையை.

பதறுதீர்கள்! 'வழிகாட்டி'யில் 'அருவி'யாகப் பொழிந்தது அடியேன்தான்! இருபது வருஷங்கள் முன்பு எழுதியதால், அதன் தீபாவளி மலரின் பிரதி கிடைக்காமல் திண்டாடிக்கொண் டிருந்தேன். நான் எழுதிய கதைகள் மட்டுமே இடம்பெற்றிருக்கும் 'கதைக் குவிய'லில் என்னுடைய கதையையே கொண்டு வந்து சேர்த்ததற்கும், அதன் மூலம் என் புத்தகத்தை நிறைவு செய்ததற்கும் என் மனமார்ந்த நன்றி!

இந்நேரம், தங்கள் பெயரில் கதை இல்லாது திண்டாடிக் கொண்டிருப்பது நீங்கள்தான். நானோ?..இதோ நகைத்துக் கொண்டிருக்கிறேன்.

இங்ஙனம் 'குழலன்',
(மாஜி 'அருவி').

# "திருடனின் தீபாவளி!"

ப. ரா.



சிறைச் சாலையின் பிரம்மாண்டமான இரும்புக் கதவு திறந்தது. பதின்மூன்றுவது தடவையாகக் கடுங்காவல் தண்டனையை அநுபவித்துத் தீர்த்து விட்டு வெளியே வந்தான் முத்தையன். மீண்டும் சுதந்தர உலகில் கால் வைத்த அவனைப் பட்டாசுகளின் ஓசையும் வெடிமருந்தின் நாற்றமும் வரவேற்று, தீபாவளிப் பண்டிகை அருகில் நெருங்கி விட்டதென்று உணர்த்தின. அந்தப் பக்காத் திருடனின் மனத்திலும் ஒரு விதமான ஆவலும் பரபரப்பும் உண்டாயிற்றென்ருல், அது இயற்கைதானே?

முத்தையனது சொந்த ஊரான நாகப்பட்டினம் அங்கிருந்து சுமார் இருபது மைல் தொலைவிலிருந்தது. அவன் மனைவி மக்கள் வசிப்பது அவ்வூரில்தான். வளையல்காரனும் பெருங்காய வியாபாரியும், வெளியூரெல்லாம் திரிந்துவிட்டு இடையிடையே வீடு திரும்புவது எவ்வளவு சகஜமோ, அவ்வளவு சாதரணமாகி யிருந்தது முத்தையன் சிறை வாசம் முடிந்து வீட்டுக்கு வருவதும்! ஆனல் இம்முறை தீபாவளிக்காகப் புதுத் துணிமணிகளும் பட்டாசு-மத்தாப்பு வகையருக்களும் இல்லாது வெறுங் கையாய்ச் செல்ல மனம் இடந்தரவில்லை.

அதற்குத் தேவையான பணத்தைச் சம்பாதித்துக் கொள்ளவும் அவனுக்கு ஒரே வழிதான் தெரியும். நன்கு அநுபவமுற்றிருந்த அந்தப் 'பழைய' மார்க்கத்தை விட்டால், வேறு யோக்கியமான முறையில் அத்தனை விரைவாகப் பொருள் கிட்டாது. ''மீண்டும் பிடிபட்டால்....?'' என்று முத்தையன் ஒரு நிமிஷம் தயங்கினது உண்மையே. ஆயினும் உடனேயே அவன் தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டு விட்டான்— ''பூ! இது வரையில் நாம் சிக்கியிராத பிரமாத ஆபத்து இப்போது என்ன வந்துவிடப் போகிறது! பண்டிகையும் அதுவுமாய் - வெறுங் கையாய்ச் சென்று மனைவியின் முகத்தில் விழிப்பதை விடச் சந்தோஷமாக மீண்டும்

சிறைக்கே திரும்பிப் போகலாமே'' என்றுதான் எண்ணினன்.

காலையில் ஜெயில் களிமொத்தையைத் தின்றுவிட்டு நடக்கத் தொடங்கியவன் அஸ்தமிக்கும் சமயம் தனலக்ஷ்மிபுரம் வந்து சேர்ந்தான். பெயருக்கேற்ப அது பணக்காரர்கள் மலிந்த ஊர்; திருடுவதற்கு அருகதையுள்ள இடம்; அதோடு, அங்கிருந்து இன்னும் ஐந்தே மைல் தூரம் நடந்தால் முத்தையனது ஊரை அடையலாம்.

ஊர் அடங்கும் வரை ஓர் மதகின் மீது அமர்ந்து அவன் பொறுமையாகக் காத்திருந்தான். அவனுக்கு மத்தியான போஜனமாகவும் இடைவேளையாகவும் ராத்திரிச் சாப்பாடாகவும் உதவியிருந்த வெற்றிலையும் பாக்கும் தான் இப்போதும் தனிமைத் துன்பம் தோன்ருதவாறு துணை நின்றன.

* * *

நள்ளிரவு நேரம். கருமமே கண்ணுன முத்தையன் பிசு பிசுவென்று தூறிக்கொண்டிருந்த மழையைப் பொருட்படுத்தாமல் அந்தப் பெரிய பங்களாவை நெருங்கினன். எட்டடி உயரமுள்ள மதிற் சுவரின்மீது அனுயாசமாக ஏறிக் குதித்தான்.

கீழே கிடந்த கண்ணுடித் துண்டொன்று தாமதிக்காமல் அவன் காலில் பொத்துக் கொள்ள, ரத்தம் பீறிட்டது.

'சுக்லாம் பரதரம்' குட்டிக் கொள்ளும்போதே இப்படி!

அடுத்தாற்போல் கிணற்றங்கரைத் தண்ணீர்த் தொட்டி மீது இடறி விழுந்தான். தொழுவத்தில் கட்டப்பட்டிருந்த மாட்டினிடம் ஒரு முட்டும் குதிரையிடம் ஓர் உதையும் வாங்கிக்கொண்டான். இதுபோன்ற இன்னும் சில சில்லறை இடையூறுகளைச் சமாளித்து முன்னேறி, மழைத் தண்ணீர் விழும் குழாயில் ஏறி, திறந்திருந்த மாடி ஜன்னல் மூலமாக வீட்டினுள் பிரவேசித்துவிட்டான்.

வீடு அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தது. நாற்புறமிருந்தும் குறட்டைச் சப்தங்கள்தான் எழுந்து முத்தையன் காதைத் துளைத்தன. அவன் புகுந்த அறையில் மனிதர் யாருமில்லையென நிச்சயம் செய்து கொண்டு, ஓர் நெருப்புக் குச்சியைக் கிழித்துப் பார்த்தான். அதன் வெளிச்சத்தில் அந்தக் கண்ணுடிக் கதவு அலமாரி தென் பட்டது.

என்ன அதிர்ஷ்டம்! பணமும் காசும் ஒரு பெரிதா? இங்கே கண்ணைப் பறிக்கும் வர்ண விசித்திரங்கள் காட்டி மிளிரும் பட்டாடைகளைக் கண்ட அவன் மனம் துள்ளிக் குதித்தது. தீக்குச்சியின் ஒளியிலேயே இப்படி 'டால்' வீசும் அவை ஜவுளிக் கடை 'ட்யூப்' விளக்கின் வெளிச்சத்தில் எப்படி மின்னியிருக்க வேண்டும்!




Advt.




''ஏனையா, உமக்குக் கண் தெரியாது? கழுதை மாதிரி மேலே வந்து விழறிங்களே!''

''மன்னிக்கணும்! நீங்க குட்டிச் சுவராட்டமா பாதையில் நிற்பதைக் கவனிக்கவில்லே!''

---

மேலிரண்டு தட்டுக்களில் ஆடைகள். கீழிரண்டு தட்டுக்களிலோ..? கேட்பானேன்? பட்டாசு - மத்தாப்பு வகைகள் கட்டுக்கட்டாகக் காட்சி தந்தன. அந்தப் பணக்காரக் குடும்பம் தீபாவளிப் பண்டிகையை வரவேற்க முற்றிலும் தயாராக இருந்தது.

பார்க்க வேண்டியவற்றைப் பார்த்து விட்ட முத்தையன் மேலும் தயங்கவில்லே. வழியில் கண்டெடுத்துத் தன் மடியில் பத்திரப்படுத்தி யிருந்த இரும்புக் கம்பியை எடுத்தான். ஐந்தே நிமிஷங்களில் அலமாரியின் பூட்டைத் திறந்து விட்டான். தேவையான துணிகள், பட்டாசுகளே எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு அதைப் பற்களால் கௌவியபடி மீண்டும் குழாய் வழியாக இறங்கத் தொடங்கினன்.

ஏறும்போது ஒரு தொந்தரவும் தராத குழாயில் இப்போது ஒரு புது உபத்திவரம் முளேத்து அவன் போக்கைத் தடை செய்தது.

* * *

**'சர்'**ரென்று ஒரு விநாடிக்குள் பத்தடி சறுக்கிக்கொண்டு இறங்கி விட்ட முத்தையன், நடுவழியில் ஒரு 'பிரேக்' போட்டு நின்றுவிட்டான். உருண்டையான ஒரு வஸ்து அவன் வழியை அடைத்துக் கொண்டிருந்தது. அதோடு நின்றிருந்தால் பரவாயில்லே. அங்கிருந்து அவனே மேலே உந்தித் தள்ளவும் முற்பட்டது அது!

முத்தையன் பயந்தே போனுன் என்று சொல்லத் தேவையில்லே. இதன் அர்த்தத்தை அறிய முடியாது ஒரு நிமிஷ காலத்திற்கு அவன் மூளேயெல்லாம் குழம்பிப் போயிற்று. பூத-பைசாசங்களேப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த அவனுக்கு உடல் பதறி மேலெங்கும் வியர்வையும் பொழியத் தொடங்கியது. இது வரையில் இத்தகைய அநுபவம் ஏற்பட்டதே இல்லே.

ஆனுல்....! இது என்ன சப்தம்? தன்னே மேலே உந்தும் வஸ்துவா இப்படி முக்கி முனகிப் பெருமூச்சு விடுகிறது, 'ஹூம்' ஹூம்.' என்று? அப்படியானுல் அது கட்டாயம் மனிதப் பிறவியாகத்தான் இருக்க வேண்டும்! சற்றுத்-துணிச்சல் வரப் பெற்றவனுய் முத்தையன் ஒரு 'தம்' கட்டிக் கொண்டான். அதற்கு மேல் அவனேத் தள்ள முடியாத வஸ்து அதாவது அந்த மனிதன் தலே இன்னும் அதிகமான பெருமூச்சுக் களே வெளியிட்டது.

''நீ யார்?'' என்று தணிந்த குரலில் விசாரித்தான், முத்தையன் வாயிலிருந்த மூட்டையைக் கை விடாமல்.

''நீ?'' என்று பதில் கேள்வி எழுந்தது.

''நான் ஒரு திருடன்.''

''அப்படியானுல் நான் பக்காத் திருடன் என்று வைத்துக்கொள்ளேன்.''

''சரி, என் வேலை முடிந்து விட்டது. நான் போகிறேன். வழி விடு.''

''அது முடியாது. நீயும் என்னுடன் மேலே வந்துதான் ஆக வேண்டும்'' என்முன் பக்காத் திருடன், கண்டிப்பாக.

''ஏனே?''

''இது என் பாதுகாப்புக்காக. நீ போகிற போக்கில் ஏதாவது இரைச்சல் போட்டு இந்த வீட்டாரை எழுப்பிவிட்டுப் போய் விட்டாயானல் அப்புறம் என் கதி என்னுவது?''

முத்தையனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. போலீஸ்காரன்களும் பிறரும் அவனிடம் முரட்டுத் தனமாக நடந்து கொள்வது வேறு விஷயம். ஆனல் கேவலம் தன்னைப் போல் ஒரு திருடனின் உத்தரவுக்குக் கீழ்ப்படிவதென்ருல்....?

''டேய், மரியாதையாக இறங்கி வழி விடப் போகிருயா, இல்லையா?''

''ஒருகாலும் முடியாது.''

''ஹூம் அப்படியா? பார்க்லாம்.'' தன் முழுப் பளுவையும் யும் (மூட்டையுட்பட) அவன் தலைமீது போட்டு அழுத்தினன் முத்தையன். அந்தத் தடியனும் விட்டுக் கொடுக்கவில்லை. பூமியிலிருந்து இருபதடி உயரத்திற்கு மேல் ஒரு நிமிஷ காலம் இந்த மகத்தான போராட்டம் நிகழ்ந்தது. இருவருடைய முக்கல்களும் முனகல்களும் எங்கும் எதிரொலித்தன.

இந்த நிலையில் மேற்கண்ட பலப் பரீக்ஷை நியாயமானதல்ல வென்று கருதி, அதை உடனடியாக நிறுத்த எண்ணிய குழாய் இரண்டாக உடைய, கண்ணிமைக்கும் நேரத்தில் திருடர்கள் இருவரும் மண்ணைக் கௌவினர். ஆயினும் அவர்களது போராட்டம் வெறி குன்ருமல் தொடர்ந்து நடந்தது. குத்துக்கள், உதைகள் ஆகியவையெல்லாம் தாராளமாகப் பரிமாறிக் கொள்ளப் பட்டன. அவர்கள் போக்கில் விட்டிருந்தால் ஒரு வேளை பொழுது விடியும் மட்டும் யுத்தம் நின்றிராது.

இந்த ஆரவாரத்தைக் கேட்டு வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டு விட்டனர். மின்சார விளக்குகள் எரியத் தொடங்கின. ''யார், அங்கே?'' ''பிடி அவர்களை'' என்பன போன்ற கர்ஜனைகள் புறப்பட்டன. வேறு வழியின்றி அரை மனதாகச் சண்டையை நிறுத்திச் சுற்று முற்றும் பார்த்தனர் திருடர்கள். முத்தையன் கிளப்பிக்கொண்டு வந்த மூட்டை கீழே விழுந்து கிடந்தது. அவன் ஓரடி முன்னல் வைக்குமுன் மற்றவன் சட்டெனப் பாய்ந்து அதைக் கையிலெடுத்துக்கொண்டான். மறுகணம் அவனை அங்கே காணவில்லை.

பாவம்! முத்தையனுக்கு இதை விடப் பெரிய அதிர்ச்சி வேறென்ன வேண்டும்? அவன் கைக் கெட்டியது வாய்க்கு எட்டாது போய்விட்டது. ஆயினும் அசட்டு விழி விழித்துக் கொண்டு இங்கேயே நிற்பது ஆபத்தென்று உணர்ந்தவனுக அவனும் ஓட்டம் பிடித்தான். அந்த நேரத்திற்குள் கம்பு, கழிகள் சகிதம் அவனை விரட்ட வந்துகொண்டிருந்த வீட்டுக்காரர்கள் கையில் அகப்படாது தப்புவதற்குத்தான் அவனுடலில் எஞ்சியிருந்த சக்தி பயன்பட்டது.



'**வெ**றுங் கையாக வீடு செல்வதில்லை' என்ற வைராக்கியம் எப்போதோ மறைந்துவிட்டது. 'பசியும் பட்டினியுமாக நாம் இத்தனை சோதனைகளைச் சமாளித்ததே பெரிய காரியம். நமக்கும் பிராப்தமில்லாது போயிற்று. என்ன செய்யலாம்? இப்போது உடனடியாக வயிற்றுக்கு உணவு தேவை; படுக்க ஓரிடம் வேண்டும். ஆறுதலளிக்க மனைவி—மக்கள் முகம் காணவேண்டும்' என்ற ஒரே குறியுடன் தள்ளாடி நடந்து ஐந்து மைல் தூரத்தையும் கடந்தான் முத்தையன். பொழுது விடியும் நேரத்துக்கு நடைப் பிணம் போல் வீடு வந்து சேர்ந்தான்.

உள்ளிருந்து அவன் மனைவியும் மூத்த மகனும் பேசும் குரல்கள் கேட்டன. ஏனோ இத்தனை அதிகாலையிலேயே அவர்கள் விழித்துக்கொண்டிருந்தனர். முத்தையன் கதவைத் தட்டினான். ''யாரது?'' என்று குரல் கொடுத்தான் மகன்.

''நான் தானடா, சோமு. கதவைத் திற'' என்று முத்தையன் கூறியதும் கதவு திறந்தது. அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. ஒரு வருஷ காலத்திற்குள் நன்றாய் மரம்போல் வளர்ந்து ஆஜானுபாகுவாய்த் தோற்றமளித்தான் சோமு.

''எப்ப வந்தே, நாயனா?'' என்று சம்பிரதாயமான கேள்வியைக் கேட்டு மகன் பல்லை இளித்தான். கையில் மண்ணெண்ணெய்க் குப்பி விளக்கை ஏந்தியபடி முத்தையனின் மனைவியும் அவனை வரவேற்றாள்.

''அடே, அப்பனை மிஞ்சி ஒரு முளம் ஜாஸ்தி வளந்துட்டியேடா சோமு.. ஆமாம். மூஞ்சியெல்லாம் என்ன இப்படி வீங்கிக் கெடக்குது? உன் உடம்புக்கு என்ன?'' என்று தகப்பன் விசாரித்தான்.

''உடம்புக்கு ஒண்ணுமில்லே, நாயனா! எல்லாம் இந்தப் பாளும் வயிறு செய்யற வேலைதான். இப்பிடி மூஞ்சி வீங்கியிராத போனாத் தீபாவளிக்கு இதெல்லாம் கெடச்சிருக்குமா?''

சோமு சுட்டிக் காட்டிய பக்கம் நோக்கினான் முத்தையன். அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. நியாயம்தான். அந்தப் பங்களாவிலிருந்து அவன் திருடி, பின்பு பறிகொடுத்த ஆடைகள், பட்டாசு வகைகள் எல்லாம் அங்கே குடிசையின் மண் தரையில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன! அவன் கண்கள் பொய் சொல்லவில்லை. மண்ணெண்ணெய்க் குப்பி விளக்கும் ஏமாற்றவில்லை!

''பாத்தியா நாயனா? என்ன இருந்தாலும் நான் உன் மவன் தானே? புலிக்குப் பொறந்தது பூனையாய்ப் போகுமா? அந்தப் பயலெ நல்ல ஒதை ஒதையின்னு ஒதைச்சுப் போட்டதுமில்லாமெக் கடைசியிலே அவன் கை மூட்டையையும் தட்டிக்கினு வந்துட்டேன்.. ஆமா.. ஒன் மூஞ்சிகூடத் தான் வீங்கினாப்போல இருக்குது! ஏன் நாயனா இப்பிடி முளிக்கிறே? ஒன் உடம்புக்கு என்ன?''

''அட பாவி, மவனே! நீ ஒதைச்ச ஒதையிலே தாண்டா எனக்கு ஒடம்புக்கு வந்துட்டுது. அந்தப் பாளும் இருட்டுலே..'' தலை சுற்ற, நாக் குழறப் பொத்தென்று பாயில் விழுந்தான் முத்தையன். அவன் உடலெல்லாம் கணுக் கணுவாக வலித்தது.

ஆனால் உள்ளத்திலே ஒரு நிம்மதி, சந்தோஷம்.

குடும்பத் தொழிலைக் கவனித்துக்கொள்ளப் போதிய பக்குவம் அவன் மகனுக்கு வந்துவிட்டது. இனி முத்தையன் கஷ்டப்பட வேண்டியதில்லை, ஜெயிலுக்கும் போக வேண்டியதில்லை. இம் முறை சம்பிரமமாகத் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடிவிட்டு அவன் தொழிலினின்று ஓய்வுகொள்ளத் தீர்மானித்துவிட்டான்!

அந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஆசி கூறுவதுபோல் அதிர்வேட்டு ஒன்று படாரென வெடித்தது.

# மிகப் பெரிய வெடி

## பெ.நா.அப்புஸ்வாமி

தீபாவளிப் பட்டாசுகளில் எல்லாம் மிகப் பெரியது எது? நான் குழந்தையாயிருந்தபோது இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால் சற்றே தயங்கியிருப்பேன். யானைவெடியா, இரட்டை வெடியா என்பதைப் பற்றி எனக்குச் சந்தேகம் வந்திருக்கும். இரட்டை வெடி என்பது விசித்திரமானது. அதைக் கீழே நிறுத்திவைத்துக் கொளுத்த வேண்டும். கொளுத்தினால், படார் என்று வெடித்து, ஒரு யானை உயரம் மேலே போகும். அங்கேயும் ஒரு முறை படார் என்று வெடிக்கும். நல்ல ஓசை. யானை வெடி என்பது கட்டை விரல் பருமனும், சுமார் ஐந்து அங்குலம் உயரமும் உள்ள ஒரு பட்டாசு. அந்தக் காலத்திலே அதன் ஓசையும் அதிகம், விலையும் அதிகம்—அதாவது, அந்தக் கால விலைப்படி அதன் விலை அரையணா.

யானை வெடி அபாயமானது. ஒரு முறை என் சிநேகிதன் ஒருவன் கொளுத்திய யானை வெடி வெடிக்கவில்லை. அது ஏன் வெடிக்கவில்லை என்று பார்ப்பதற்கு அதன் கிட்டப் போய்க் குனிந்தான். அந்தச் சமயம் பார்த்து அது வெடித்து விட்டது. உடனே எங்களுக்குச் சிரிப்பு வந்தது. பக்கென்று சிரித்தோம். மறுகணம், அவன், 'ஓ!' என்று அலறியது எங்கள் காதில் விழுந்தது: தீயால் வெந்து கரியாகிய அவனுடைய முகம் எங்கள் கண்ணில் பட்டது. நாங்கள் திடுக்கிட்டுத் திகைத்துப் போனோம். எங்கள் நெஞ்சு பகீர் என்றது. அன்று எங்களுடைய தீபாவளிக் கொண்டாட்டம் அதோடு சரி. முகம் எல்லாம் தீயால் புண்ணாகி அவன் மூன்று மாதம் கஷ்டப் பட்டான். பிறகு, நல்ல வேளையாக, தழும்போடு தப்பினான்.

இந்தக் காலத்தில் மிகப் பெரிய வெடி எது என்று கேட்டால், நீங்கள் பளிச்சென்று 'ஆடம்-பாம்' என்று சொல்லி விடுவீர்கள். எங்கள் காலத்து யானைவெடியைவிட இது எத்தனையோ மடங்கு ஓசை அதிகமாக உள்ளது. இதனாலும் பெரிய அபாயம் ஏற்படக்கூடும்; ஏற்பட்டும் இருக்கிறது.

ஆனால், உலகத்திலேயே மிகப் பெரிய வெடி எது என்று கேட்டால், சிறிது காலத்துக்கு முன் வரையில் 'ஆடம்-பாம்' என்று சொல்லி வந்தார்கள்—அதாவது நிஜ அணுக்குண்டு. இரண்டு நகரங்களையே இது அழித்து விட்டது. மூன்றாவதை அழித்திருந்தால், சிவனுடைய புன்சிரிப்புக்குச் சமமாக ஆகியிருக்கும்.

இந்த அணுக்குண்டைக் கண்டு பிடித்தவர் யார் தெரியுமா? ராபர்ட் ஓபன்ஹைமர் என்பவர். அவர் மிகவும் அற்புதமான ஒரு மனிதர். அவருடைய குழந்தைப் பருவமும் மிக ஆச்சரியமானது.

ஓபன்ஹைமர் நியூயார்க்கிலே, 1904-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 22-ஆம் தேதியன்று பிறந்தார். அவருடைய தாயும் தந்தையும் யூதர் வகுப்பினர். அவருடைய தகப்பனார் ஜெர்மனி நாட்டினர்: மிகுந்த செல்வம் படைத்தவர்.

ஆகையால் பிறக்கும் போதே ஓபன்ஹைமருக்கு மிகவும் சௌகரியமான வாய்ப்புக்கள் கிடைத்திருந்தன. மேலும், இயற்கையாகவே அவர் மிக்க திறமை வாய்ந்தவர். பல விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆவல் உள்ளவர். மண்ணை அளைந்து, மற்றச் சிறுவர்களோடு விளையாடி, சட்டையை அழுக்காக்கிக் கொள்வதில் அவருக்கு விருப்பமே இல்லை.

அவருக்கு ஐந்து வயதாயிருக்கும் போது அவருடைய பாட்டனுர் அவருக்குச் சில விசித்திரமான சிறு கற்களைக் கொடுத்தார். உடனே அவருக்குப் பூ தத்துவ சாஸ்திரத்திலே மனம் சென்றது. பிறகு, அவருடைய தாயார் அவருக்கு ஓவியக்கலை கற்றுக் கொடுத்தார். உடனே தாம் ஒரு சிற்பி ஆகவேண்டும் என்று அவருடைய ஆசை மாறிற்று. பிறகு கவி ஆகவேண்டும் என்று விரும்பி, பாட்டுக்களைப் படித்தார்; எழுதினுர். பிறகு, ஒரு மைக்கிராஸ்கோப்புக் கிடைத்தது. உயிரியல் ஆசிரியர் ஆக வேண்டும் என்று எண்ணம் திரும்பிவிட்டது.

இப்படிப் பலவகையான ஆசை கொள்பவனும், திறமை மிக்கவனுயும் தோன்றிய அந்தச் சிறுவனை அந்தக் காலத்தில் ஆட்லர் என்பவர் நடத்தி வந்த ஒழுக்கப் பண்பாட்டுப் பள்ளி என்று பொருள்படும் எதிகல் கல்ச்சர் ஸ்கூலில் சேர்த்தார்கள். அந்தப் பள்ளிக்கூடம் தனிப்பட்ட முறையானது. மிகச் சிறந்த புத்திசாலிச் சிறுவர்களுக்கு மட்டுமே அங்கே இடம் உண்டு. அப்படித் தேர்ந்தெடுத்த மாணவர்களுக்குத் தாமாகச் சிந்திக்கவும் தம்முடைய தனிப்பட்ட பண்புகளை வளர்க்கவும் அங்கே ஊக்கம் அளித்தார்கள். அந்தப் பள்ளிக்கூடத்திலேயே மிகவும் புத்திசாலி ஓபன்ஹைமர்.

சிறு வயது முதலே அவருக்குப் பல மொழிகளும் எளிதாக வந்துவிட்டன. கிரீக், பிரெஞ்சு, ஸ்பானிஷ், இத்தாலியன், முதலிய மொழிகள் அவருக்கு அதிகம் பிடித்திருந்தன. தம்முடைய ஏழாவது பிராயத்திலேயே அவர் கிரேக்கக் கவிகளைப் படிக்கத் தொடங்கிவிட்டார். கவிதையிலேயே அவருடைய மனம் செல்லத் தொடங்கியது. பிற்காலத்தில் அவர் வடமொழியும், ஜெர்மனும், டச்சும், நன்கு பயின்ருர்.

சிறிது காலம் கழிந்ததும், அவருக்குப் பூ தத்துவ சாஸ்திரத்தின் மேல் மீண்டும் மோகம் உண்டாயிற்று. நிறையப் புஸ்தகங்களை வாங்கினுர். கற்களைத் திரட்டினுர். பூ தத்துவ விஷயத்தைப் பற்றி அமெரிக்காவில் உள்ள பேராசிரியர்களுக்கு எல்லாம் கடிதங்களை எழுதினுர். தம்முடைய கையெழுத்தைப் பார்த்து, தான் ஒரு சிறுவன் என்பதை அவர்கள் தெரிந்துகொண்டு விடுவார்கள் என்று பயந்து, அக் கடிதங்களை 'டைப்' அடித்து அனுப்பினுர். அவர் எழுதிய கடிதங்களைப் படித்துப் பார்த்த ஒரு பேராசிரியர் அவரை நியூயார்க் நகரிலுள்ள தாதுப்பொருள் சங்கத்தில் ஓர் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சிபாரிசு செய்தார். மற்றப் பேராசிரியர்கள் பலரும் ஒப்புக்கொள்ளவே, அவர் அதன் அங்கத்தினராக ஏற்றுக் கொள்ளப் பட்டார். அப்போது அவருக்கு வயது பதினென்று! அவருடைய வயது இன்னதென்று யாரும் அவரைக் கேட்கவும் இல்லை: அவரும் தாமாகச் சொல்லவும் இல்லை.

மறு வருஷம் அவரை அந்தச் சங்கத்தில் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும் என்று அழைத்தார்கள். அவருக்குப் பயம் பிடித்துவிட்டது. ஏதாவது ஒரு சாக்குச் சொல்லி, முடியாது என்று மறுத்துவிடலாம் என்று நினைத்தார். பிறகு உண்மை வயதைச் சொல்லிவிட்டால், அவர்கள் விட்டுவிடுவார்கள் என்று நினைத்தார். கடைசியில், இரண்டும் செய்யவில்லை. அவருடைய தகப்பனுர் அவருடன் பேசி, அவருக்குத் தைரியம் அளித்து, குறித்த நாளன்று, அவரை அந்தச் சங்கத்துக்கு அழைத்துக் கொண்டு போனுர்.

அவரைக் கண்டதும், அங்குள்ள பேராசிரியர்கள் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அவர்கள் சற்றே வெட்கமும் அடைந்தார்கள். ஆனுல், அவர் பேசத் தொடங்கிய பின், விஷயம் பொருத்தமாகவும், தொடர்ச்சியாகவும் இருக்கக் கண்டு, அவர்கள் பொறுமையோடும், வியப்போடும் கேட்டார்கள்.

பின்பு, அவருக்கு ரசாயனத்தில் பற்று ஏற்பட்டது. அவருக்கென்று தனியாக ஒரு சோதனைச் சாலையை, ஆயிரக் கணக்கான

டாலர் செலவில், அவருடைய தகப்பனுர் கட்டிக் கொடுத்தார். ஒரு சிறந்த விஞ்ஞானியை அவருக்கு ஆசிரியராக அமர்த்தினுர். அங்கே சில காலம் அற்புதமாக வேலை செய்தார். பிறகு, தம்முடைய தகப்பனுரோடு சிறிது காலம் பல தேசங்களில் யாத்திரை செய்தார். அங்கங்கே விஷயங்களைக் காணக் காண, அவருடைய மனத்திலே பலவிதமான ஆசைகள் மாறி மாறி எழுந்துகொண்டே வந்தன.

அவருடைய பதினெட்டாம் வயதில், அவர் ஹார்வர்டு பல்கலைக் கழகத்துக்குச் சென்ருர். அங்கே ரசாயனத்தையும், பௌதிகத்தையும் தீவிரமாகக் கற்ருர். அங்கு அவருடைய பௌதிக ஆசிரியர், 'இந்த இளைஞன் பௌதிகத்தை ஒரு கலக்குக் கலக்கப் போகிருன்; அல்லது உலகத்தையே கலக்கிவிடுவான்' என்ருர். அவர் சொல்லிய ஜோசியம் இரண்டும் பலித்துவிட்டது.

பல காலம் இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, முதலிய பிரதேசங்களில் உள்ள பௌதிக விஞ்ஞானிகளோடு தொடர்பு கொண்டார். அவர்களிடமிருந்து பல விஷங்களைக் கற்றுக் கொண்டார். பல நாடுகளில், பல மொழிகளில் பிரசங்கம் செய்தார். பின்பு அமெரிக்காவுக்கு மீண்டும் வந்தார்.

சென்ற உலக மகா யுத்தத்தின் போது மிகச் சிறந்த போர்க் கருவி ஒன்றை யார் முன்னுல் அமைக்கிருர்களோ அவர்களுக்கு வெற்றி என்ற நிலை வந்துவிட்டது. அத்தகைய ஆயுதம் அணுக்குண்டு. அதைத் தயார் செய்ய ஜெர்மனி நாட்டுப் போர்த்தலைவர்கள் மும்முரமாக முயன்று கொண்டிருந்தார்கள். ஆகவே, அப்படிப்பட்ட முயற்சியில் அமெரிக்காவும் இறங்கிற்று—அருச்சுனன் பாசுபதத்தை நாடியது போல.



பல நாடுகளிலிருந்தும் தலை சிறந்த விஞ்ஞானிகள் அமெரிக்காவிலே கூடினுர்கள். 1941-ஆம் வருஷ வாக்கில், அவர்களுக்குத் தலைவராக ஓபன்ஹைமர் நியமிக்கப்பட்டார். அவர்களுடைய கூட்டு முயற்சியால் பரீக்ஷார்த்தமாக ஓர் அணுக்குண்டு தயார் செய்யப்பட்டது. 1945-ஆம் வருஷம் ஜுலை மாதம் 16-ஆம் தேதி, திங்கட் கிழமையன்று காலை ஐந்தரை மணிக்கு அந்த அணுக்குண்டு வெடிக்கப் பட்டது.

அந்த அணுக்குண்டினுடைய அளவற்ற ஒளியையும், ஓசையையும் கண்ட ஓபன்ஹைமருக்கு, அப்போது தம்முடைய முயற்சி வெற்றியடைந்து விட்டது என்னும் மகிழ்ச்சியைக் காட்டிலும், அதனுல் உலகுக்கு என்ன என்ன சேதங்கள் எல்லாம் விளையுமோ என்ற அச்சமும், வருத்தமுமே மேலோங்கி நின்றன. அறிவினும் அன்பே மேல், அல்லவா?



# கண்ணீர்

எஸ். விசுவநாதன்

## 1

நான் ஒரு நாடோடிப் பையன். அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அலையும் அற்பச் சிறுவன். ஒரு நாள் பார்த்த இடத்தில் மறுநாள் என்னைப் பார்க்க முடியாது. தினசரி சுமார் பத்து மைல்கள் சுற்றித் திரியும் என் கால்களில் சக்கரம் இருக்கிறதோ என்னவோ!

நான் யாருக்காக இப்படி அலைய வேண்டும்? பூ....இது என்ன கேள்வி! எனக்கு வாய் இல்லையா, வயிறு இல்லையா? அந்த இரண்டையும் அடக்கிச் சாந்தப் படுத்தத் தான் இப்படி அலைகிறேன்; திரிகிறேன். கெஞ்சுகிறேன்; நடிக்கிறேன்.

அம்மா யார், அப்பா யார்?-ஒன்றும் தெரியாது! உறவினர் யார்? ஒருவரையும் தெரியாது! வாழ்க்கையில் இந்தப் பதினான்கு வருஷங்களாக ஏதேனும் ஒரு சுகம், ஒரு நிம்மதி உண்டா? இல்லை, இல்லை, இல்லை! பின்னே பிறந்தது முதல் சாகும் வரை இப்படியே பிச்சை எடுத்து, அலைந்து திரிந்து மழையையும் வெயிலையும் மண்டையில் தாங்கிக்கொண்டு இருப்பதுதான் எனக்கும் என்போன்றார்க்கும் தொழிலா? ஆம். அதேதான்! பிச்சைக்காரர்கள் வேண்டுமென்றே பிச்சை எடுப்பதில்லை. சந்தர்ப்பம்தான் அப்படித் தூண்டுகிறது!

## 2

மெல்ல நடந்தேன். என் கூடவே எப்பொழுதும் சுற்றும் கறுப்பன்-என் அருமை நாய்- அப்பொழுதும் வந்தது, என் பின்னே வாலை ஆட்டிக்கொண்டு. ''ஐயோ, என் கூடவே அலைகிறாயே! எனக்கு ஏதேனும் கிடைத்தால் அல்லவோ உனக்கும் கிட்டும்!'' என்று மெல்ல வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே அதை எடுத்து மார்போடு அணைத்து முத்தமிட்டேன். ''கறுப்பா! இந்த உலகத்தில் உனக்கு நானும், எனக்கு நீயும்தான்! ஹ..ஹ.. ஹா!'' என்று கேலிச் சிரிப்புச் சிரித்தபடி நடந்தேன்.

பஸ்ஸுக்காகத் தவம் கிடக்கும் ஆத்மாக்கள் நின்று கொண்டிருக்கும் 'பஸ் ஸ்டாப்பிங்'குக்கு அருகில் போனேன். நான்கு பேர்களிடம் கையை நீட்டினேன்; அவர்களோ கையை விரித்தார்கள்!

பஸ் வந்தது; எல்லோரும் முண்டு முண்டென்று முண்டினர். தம்மை மீறி வளர்ந்திருக்கும் வயிற்றைத் தடவியபடி ஒருவர் அந்த முயற்சியில் கலந்துகொண்டார். எல்லோருக்கும் இடம் கிடைத்தது. அந்தத் தொந்திக்காரரும் ஏறிவிட்டார், கடைசியாக. என் கால் கட்டைவிரலில் 'டண்'ணென்று ஒரு சிறு வெள்ளைப் பை வந்து விழுந்தது. 'ஆ' என்று வலியைச் சமாளித்துக்கொண்டு குனிந்து அதை எடுத்தேன். என் அதிருஷ்டந்தான் அப்படி எனது காலில் வந்து விழுந்தது! பஸ்ஸில் ஏறும்பொழுது யாருடையதோதான் அப்படி விழுந்திருக்க வேண்டும்! வலக்கையில் அதைப் பத்திரப்படுத்திக்கொண்டு, ''கறுப்பா....உம்....'' என்று மேலே போகச் சைகை காட்டினேன்.

ஜன நடமாட்டம் அதிகம் இல்லாத சந்தில் வந்து, கைச் சுருக்கை அவிழ்த்து உள்ளே கை விட்டுப் பார்த்தேன். உண்மையாக அவ்வளவு ரூபாயை நான் ஒருங்கே கண்டதில்லை! அவ்வளவும் பத்து ரூபாய் நோட்டுக்கள்! அதன் கீழ் ஒரு வெள்ளி ரூபாய் நாணயமும் இருந்தது. அதுதான் என் கால் கட்டை விரலின் குறுக்கே விழுந்து என்னை எடுக்கத் தூண்டியது. அதை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டேன். அதற்கு மானசிகமாக நன்றி செலுத்தினேன்.

''கறுப்பா! இன்று முதல் நாம் புதிய மனிதர்கள், கறுப்பா, புதிய மனிதர்கள்! உம், எங்கே சொல்லு, சொல்லு, என்ன 'பிஸ்கட்' வேண்டும் உனக்கு?''

கறுப்பன் காதை விறைத்துக் கொண்டு தன் உடலை ஒரு

சிலிர்ப்புச் சிலிர்த்துத் தலையைத் தூக்கி என்னைப் பார்த்தது.

"உனக்கு என்ன தெரியப் போகிறது, என் ஆனந்தம்?" என்று வெட்டிச் சிரிப்புச் சிரித்தேன் நான்.

என் நடையில் எங்கிருந்தோ ஒரு விறுவிறுப்பு வந்தது. அழுக்குக் கிழிசல் சட்டையுடனும், ஐந்து ஒட்டுப் போட்ட நிஜாருடனும் நான் ராஜநடை நடந்தேன். என் போக்கில் ஒரு புது மாறுதல் கண்டு எல்லோரும் என்னையே விழித்து விழித்துப் பார்ப்பதை நான் லட்சியம் செய்யவே இல்லை.

ஒரு பிச்சைக்காரச் சிறுவன் சுமார் நாநூறு ரூபாயை வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் உலகம் என்ன சொல்லும்? 'திருடன், கேப்மாறி, பிக்பாக்கெட்' என்றுதான் சொல்லும்!

காலையிலிருந்து உணவு ஒன்றும் சாப்பிடவில்லை. பசித்தது. இதிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து மாற்றினால் எல்லாரும் சந்தேகப் படுவார்கள். அந்த வெள்ளி ரூபாயை என்னிடமிருந்து பிரிக்க எனக்கு மனமில்லை.

தெரு விளக்கடியில் நின்று பைக்குள் கையை விட்டுத் துழாவினேன், சிறிய ரூபாய் நோட்டு ஏதேனும் இருக்கிறதா என்று. ஒன்றே ஒன்று-ஒரு ரூபாய் நோட்டு இருந்தது. அதை மாற்றி ஓட்டலில் நான்கு இட்லிகள் வாங்கித் தின்றேன், வெளியே நின்றுகொண்டு கறுப்பனுக்கும் கொடுத்தபடி. மீதிச் சில்லறையில் இரண்டணாவுக்கு நாலைந்து பழங்கள் வாங்கிக் கொண்டு மெதுவாக நடைப்பாதை மீது வந்தேன். கறுப்பனுக்குப் பழத்தைக் கண்டதும் சந்தோஷம்



## எது வழி?




தோட்டத்தின் நடுவிலுள்ள மரத்தை அடைய ஒரு வாசல் வழியாகத்தான் செல்ல முடியும். மூன்று வாசல்களில் எது சரியான வழி என்று கண்டு பிடித்துச் சொல்!

---

சொல்லமுடியவில்லை. எம்பி எம்பிக் குதித்தது. என் தோழன் அல்லவா? கிடைத்தபொழுது உண்டால் தானே உண்டது!

என்னிடம் இவ்வளவு பணம் கிடைத்ததும், நானும் ஒரு சிறிய பணக்காரனைப்போல் நடிக்க முயன்றேன். குருடனைப் பார்த்து ராஜவிழி விழி என்றால் எப்படி முடியும்? என் செய்கையில் ஒரு போலித் தன்மை பளிச்சிட்டதோ, என்னவோ!

பழத்தை எடுத்துக்கொண்டு நடைப் பாதை ஓரம் வந்து நின்றேன். ஒரு சிறுவன்-எட்டு அல்லது ஒன்பது வயது இருக்கும்—கறுத்துச் சூம்பிய முகமும், அழுக்கும் கிழிசலுமான ஒரு சட்டையும், அரையில் ஒரு கோவணமுமாக என்னைப் பரிதாபமாக நோக்கினான். அடுத்த விநாடி என் கைப் பழங்களைப் பார்த்தான். மறுபடியும் என் முகம்; திரும்பவும் என் கைப் பழம்! வயிற்றுக் கொடுமை ரொம்பப் பொல்லாதது!

நானும் அவனைப் பார்த்துவிட்டுப் பேசாமல் இருக்கவே, நான் ஒன்றும் தரமாட்டேன் என்று நினைத்துவிட்டான் போலிருக்கிறது! எனக்கு உடன் பிறப்பாகச் சகோதரர் இல்லையென்றாலும் மனிதனுக்குள்ள அன்பும் பாசமும் எனக்கு இல்லையா? இந்த மாதிரி வயிற்றுக்கு இல்லாதவர்கள் எல்லாரும் என் சகோதரர்கள்தானே!

அவன் நம்பிக்கை இழந்தவனைப்போல் தலையைத் தூக்கி என்னைப் பரிதாபமாகப் பார்த்தான். அவன் கண்கள் இரண்டும் குளம் என்றால் குளம்தான்! பின், தலையைத் தாழ்த்தி மெல்ல நடக்க ஆரம்பித்தான்.

''தம்பீ....!'' என்றேன் உணர்ச்சியுடன். அவன் நின்று என்னை நோக்கிக் கழுத்தை மட்டும் திருப்பிப் பார்த்தான்.

''இங்கே வா!....இதைச் சாப்பிடுவோம்!''

அவன் வந்தான்; ஒரு கணத்தில் அந்த முகத்தில்தான் என்ன மலர்ச்சி! நடைப்பாதையின் ஓரத்தில் அமர்ந்துகொண்டோம். ஒரு பக்கம் அந்தச் சிறுவன்; நடுவில் நான்; மறு பக்கம் கறுப்பன்.

''உலகம் ரொம்பப் பொல்லாதது தம்பீ!'' என்றேன் எல்லாம் தெரிந்தவன்போல, ஒரு பழத்தை உரித்துக்கொண்டே. 'அப்படியா?' என்பதுபோல ''உம்....?'' என்றான் அவன் என்னை நோக்கி.

''உனக்குப் புரியாது தம்பி, புரியாது! ஹ....ஹ....ஹ!'' என்று சிரித்தவாறே இரண்டு பழங்களை உரித்து அவனுக்கும் கொடுத்து இன்னொன்றை எடுத்துக் கறுப்பனுக்கும் கொடுத்தேன்.

''காலையிலிருந்து சாப்பிடவில்லையா? அதுதான் துணி மாதிரி




இருக்கிறது வயிறு!'' என்று அந்தப் பையனின் ஒட்டி உலர்ந்த வயிற்றைத் தட்டித் தடவினேன்.

மெல்ல வாய் திறந்து சிரித்தான் அவன்.

''சரி, வாருங்கள். போகலாம், இப்படியே எத்தனை நாழி உட்கார்ந்திருப்பது?'' என்று கேட்டுக்கொண்டே எழுந்தேன். மூவருமாகப் புறப்பட்டு நடந்தோம்.

வானில் நட்சத்திரங்கள் கண்ணைச் சிமிட்டின. 'இனிமேல் குஷிதான்!' என்று அவை என்னை நோக்கிச் சிரித்தபடி சொல்வது போல் இருந்தது. மனத்திற்குள் மெல்லச் சிரித்தபடி நடந்தேன்.

வழக்கமாகப் படுத்துக்கொள்ளும் இடம் வந்தது. உட்கார்ந்து கொண்டோம். என்றைக்கும் இல்லாத வழக்கமாக அன்று வெற்றிலைப் பாக்குப் போடத் தோன்றியது. கறுப்பனையும் புதிய சிறுவனையும் அங்கேயே நிறுத்தி விட்டு, அருகிலிருந்த ஒரு பீடாக் கடைக்குச் சென்று வெற்றிலையும் பாக்கும் வாங்கினேன். கடையிலிருந்தவர்கள் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். அற்பனுக்கு அதிருஷ்டம் வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்! வாங்கியதற்குச் சில்லறை கொடுக்க வேண்டுமே! ஞாபகமில்லாமல் அந்த வெள்ளைப் பணப் பையிலேயே கையிலிருந்த சில்லறையைப் போட்டுவிட்டதற்கு என்மீதே எனக்குக் கோபம் வந்தது.

இப்படித் திரும்பி, அப்படி வளைந்து, நெளிந்து பையை அவர்களுக்குக் காட்டாத மாதிரியில் சில்லறையை எடுக்க முயன்றேன். இரண்டணாவை எடுக்கும்போது ரூபாய் நோட்டை யார் தலை காட்டச் சொன்னது? 'விசுக்'கென்று அதை உள்ளே தள்ளி இரண்டணாவை நீட்டி மீதியைப் பெற்றுக் கொண்டேன். என் அவஸ்தையை அவர்கள் நன்கு ஊகித்திருக்க வேண்டும். என் அருகே கோடு போட்ட சிவப்புச் சட்டை அணிந்து நின்றிருந்த ஒருவன், ''அண்ணே, ஒரு 'சிஸர்ஸ்!'' என்று கூறியதைக் கேட்டதும்தான் என் தவற்றை நான் நன்முக உணர்ந்தேன். முறுக்கிவிட்ட கிருதா மீசை. கண்களில் கொடூரம். ஆஜானுபாகுவான உடல். கழுத்தில் காலரை ஒட்டி ஒரு புள்ளி போட்ட சிவப்புக் கைக்குட்டை!

திரும்பிப் பார்க்காமலே நடந்தேன். எப்பொழுதும் படுக்கும் இடத்தில் படுத்துக்கொண்டேன்.

படுத்த சிறிது நேரத்திற்குள் அந்தச் சிறுவன் உறங்கிவிட்டான். கறுப்பன் தன் வயிற்றின் பற்றாக் குறையைச் சமாளிக்க எங்கோ போய்க்கொண் டிருந்தது. எனக்கு உறக்கமே பிடிக்கவில்லை. எப்படி வரும் உறக்கம், மடியில் 'கனம்' இருக்கும்பொழுது?

நேரம் ஓடிக்கொண் டிருந்தது. மெல்லக் கண்ணயர்வதும் பிறகு திடுக்கிட்டு விழித்துக்கொள்வதுமாக இருந்தேன்.

அருகிலிருந்த மணிக்கூண்டு கடிகாரத்தில் மணி பதினொன்று அடித்தது. கண்களை இமை அழுத்தி மெல்ல உறக்கத்தை அழைத்தது.

உறக்கமும் அல்ல; மயக்கமும் அல்ல, அப்படிப் பட்ட ஒரு நிலை; என்னை நோக்கி ஒரு நிழல் குனிவது போல் இருந்தது. குனிந்தும் விட்டது! கனவு போன்ற நிலைதான். என்னிடமிருந்து ஏதோ எடுக்கப்படுவது போல் ஓர் உணர்ச்சி! இதெல்லாம் ஒரு நிமிஷ நேரத்தில்தான். கனவு போல் இதை எண்ணி மெல்லிய உறக்க மயக்கத்தில் ஆழ்ந்திருந்த எனக்குச் சிறிதே திறந்திருந்த இமையின் ரோமங்கள் வழியே ஒரு நிழல் வேகமாக நகர்வது போல் இருந்தது.



டேய்! எங்கேடா இப்படி வேகமா ஓடறே?

பஸ்ஸைப் பிடிக்கப் போறேண்டா!

'சடார்' என்று எழுந்துவிட்டேன். நிழல் மறைந்து ஐந்து விநாடி ஆகிவிட்டது. நான் 'சடக்' கென்று எழுந்து நின்றதும் துணி போன்ற ஒன்று என் மேலிருந்து விழுந்தது. எடுத்துப் பிரித்துப் பார்த்தேன்.

புள்ளிபோட்ட சிவப்புக் கைக்குட்டை!

எழுந்து நின்று சுற்று முற்றும் பார்த்தேன். ஆள் போய் விட்டான். என்னையறியாமல் கூச்சல் போட்டிருப்பேன்; தப்பித்துக் கொண்டேன். நான் இவ்வளவு பணத்தைப் பறி கொடுத்தேன் என்றால் யார் நம்புவார்கள்? அப்படி நம்பினாலும் எனக்கு எங்கேயிருந்து அவ்வளவு பணம் கிடைக்கும்-'திருட்டு வழி அல்லாமல்?' என்று குடைந்து கேட்டுப் பிடித்து விடுவார்களே! பொங்கி வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு, ஒன்றையும் அறியாமல் அயர்ந்து உறங்கும் அந்தச் சிறுவனைப் பார்த்தேன். இன்று மாலை வரை நானும் அவனைப் போலவேதான் நிம்மதியாகக் கவலையற்று உறங்கினேன். இன்று அது கிடைத்தது; போயும் விட்டது.

நமக்கெல்லாம் அது 'லாய'க்கில்லை. யார் யாருக்கு எது எது இருக்கிறதோ அதை அதைத்தான் அநுபவிப்பார்கள்! இது தெரியாமல் நான் சந்தோஷப்பட்டேனே! அற்ப சந்தோஷம்! இனி அதைப்பற்றி நினைப்பதே இல்லை. அது நமக்கு வேண்டவும் வேண்டாம்! வரும்பொழுது அது நம்மைக் கேட்டுக்கொண்டு வரவில்லை. போகும்போது மட்டும் நம்மிடம் சொல்லிவிட்டுப் போகுமா?

நிலா மறைந்து கருமேகம் ஒன்றுடன் ஒன்று மோதி இடி இடித்தது. 'பொட்டுப் பொட்'டென்று மழைத்துளி விழுந்தது.

''தம்பீ....தம்பீ.. எழுந்திரு, மழை....'' என்று அந்தச் சிறுவனை எழுப்பி ஒதுக்கமான இடத்திற்கு அழைத்துப் போனேன். கறுப்பனும் வந்தது.

எதையோ பறி கொடுத்துவிட்டு வருந்திக் கண்ணீர் வடிப்பதுபோல் வானம் மழை பெய்யலாயிற்று!




# நல்ல கெமிஸ்ட்ரி

சுரூமீன்

இந்த உலகத்திற்கெல்லாம் வடக்கே ஆரோரா போரியாலிஸ் என்று ஓர் இடம் இருக்கிறதாம். அநேகமாக நாம் சுவர்க்கம் என்று கூறுவோமே, அது போன்ற இடம்தான் ஆரோரா போரியாலிஸ் என்று மேனாட்டார் கூறுகின்றனர். அந்த இடத்திற்கு மிகவும் அருகாமையில் சிஞ்ஜிப் என்ற அழகான தேசம் ஒன்று இருக்கிறது. அந்த நாட்டு மக்கள் நாகரிகம் படைத்த மக்கள்தான். ஆனால் நம்மைப் போல அணுக்குண்டு நாகரிகம் அல்ல அவர்கள் அநுசரிப்பது. தங்கம், வெள்ளி நகைகள் அணியும் பழக்கம் அவர்களிடம் இருந்தது. யானை, குதிரை, மாடுகள் அவர்களால் உபயோகிக்கப்பட்டு வந்தன. அவர்களுக்கும் அரசன், மந்திரி, படைகள் எல்லாம் இருந்தன.

ஆனால் நீதிபதிகளோ நியாய

ஸ்தலங்களோ மட்டும் அங்கே கிடையாது. அவ்வளவு தூரம் மக்கள் கொலை, குற்றம் முதலியன அறியாதிருந்தனர். மற்றொரு முக்கியமான விஷயம். அங்கே கடவுள் வழிபாடு கிடையாது. ஆம். குற்றம் செய்தவர்கள் அல்லவா கடவுளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்? செல்வம் வேண்டுபவர்கள் அல்லவா கடவுளிடம் வரம் கேட்க வேண்டும்? துன்பங்கள் மிகுந்தவர்கள் அல்லவா இன்பம் எய்தக் கடவுளை நாட வேண்டும்? அந்நாட்டில்தான் ஒரு குறையும் கிடையாதே. ஆகவே கடவுள் வழிபாடும் கிடையாது.

இந்தச் சமயத்தில்தான் சிஞ்ஜிப் மன்னனுக்கு நெடுநாளுக்குப் பின் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. தனக்குப்பின் சிம்மாசனம் ஏறப் போகும் அந்தக் குழந்தைக்குத் தேவையான வித்தைகளைக் கற்பித்து வைத்தான் மன்னன்.

ஆனுல்..?

ஆம்..குடிமக்களைக் காரணமின்றித் துன்புறுத்தும் குனம் அவ்விளம் வயதிலேயே அழகினில் சிறந்த அரசகுமாரியைத் தேடி அமைந்தது.

திடீரென்று யானைமேல் ஏறுவாள். வேகமாக அதை ராஜ வீதிகளில் விரட்டுவாள். மக்கள் கதி கலங்குவர். தம் உயிர் இன்றே, நாளையோ என்று பொழுதை ஓட்டும் நிலைமைக்கு வந்து விட்டனர் மக்கள். திடீரென ஓர் அரண்மனைச் சேவகன் ஒரு பிரஜையிடம் செல்வான். "இளவரசியின் உத்தரவு, உங்கள் வீட்டிலுள்ள உணவுத் தானியங்களை எடுத்துவரச் சொல்லி" என்பான். ராஜ விசுவாசம் மிகுந்த குடிமகன் அரசி கேட்டவைகளை மறுவினாடி கொடுத்தனுப்புவான். அந்தோ! அவை உடனுக்குடன் நாசம் செய்யப்பட்டுவிடும். இதுபோல் இன்னும் எத்தனையோ?

புத்திமதிகள் கூறிப் பார்த்தான் மன்னன். கடைசியில், நாளடைவில் குணம் திருந்திஞல்தான் உண்டு என்று பேசாதிருந்து விட்டான்.

காலப் பறவை வேகமாகப் பறந்துகொண் டிருந்தது.

அரசகுமாரி பதினெட்டு வயதை அடைந்து விட்டாள். கண்டோரை மயக்கும் அழகு. கல் நெஞ்சமும் கரைந்துவிடும் அவளது உருவில், தன்னுட்டு வழக்கப்படி அவளுக்குத் தகுந்த கணவனைத் தேடி தூது விட்டான் மன்னன்.

காலப்போக்கில் இளவரசி சிறு வயதில் புரிந்த தீங்குகளைச் செய்வதினின்று விடுபட்டாள். 'பழைய அரசகுமாரியா இவள்?' என்று யாவரும் விரலை மூக்கினருகில் கொண்டு போயினர். ஆனுல் தலைவலி போய்த் திருகுவலி வந்து விட்டதுபோன்ற சம்பவம் ஒன்று நிகழ்ந்துவிட்டது.

ஆம்! தான் பழைய காலத்தில் பிரஜைகளுக்கு இழைத்த தீங்குகளை எண்ணி எண்ணி உளம் குலைந்தாள் இளவரசி. தன் குறும்புத்தனத்தால் உணவிழந்த குடிகள் பட்ட துன்பங்களை எண்ணி மனம் நொந்தாள். தன் யானையின் வேகத்தால் ஏற்பட்ட பயத்துடன் தெரு வீதிகளில் போட்டது போட்டபடியே ஓடிய மக்களை நினைத்து உள்ளம் நெகிழ்ந்தாள்.

அழுகை! எப்பொழுதும் அழுகை. உல்லாசமாகத் திரிய வேண்டிய காலத்தில் ஊனும் சரிவரக்கொள்ள மறுத்தாள் அரசிளங்குமாரி. எப்போதோ செய்த தவற்றை எண்ணி அர்த்தமில்லாமல் அழுதாள் எழிலரசி. ஆம்! தற்காலத்திய மனேதத்துவ நிபுணர்கள் வருணிக்கும் 'மெலன்காலியா' என்ற நோய் வர்ணிப்பிலடங்கா அவ்வழகு ராணியைப் பிடித்து விட்டது.

தவறுசெய்தால் உளம் நோவது நல்லதுதான். ஆனுல், அந்தச் செயலே ஒரு வியாதிபோல் மாறி விட்டதென வருத்தப்பட்டான் மன்னன். உடற்குறை தீர்க்கும் மருத்துவர்களால் அவளை மாற்ற முடியவில்லை. பின் என்னதான் செய்வது?

மேனி சிதைந்தவண்ணம், உடல் நோயையே கூட்டி வந்துவிடு

வாளோ என்று பட்டத்திளவர சியைக் குறித்து வருந்தினன் மன்னன்.

தண்டோரா பறந்தது:

''அழகு ராணியின் உளநோய் தீர்த்து அவளைத் தன் முத்துப் பற்களைக் காட்டி முறுவலிக்கச் செய்யும் தீரனுக்கு அவள் பரிசா வாள்.''

கதைகளில் கூறுவதுபோல் பலர் வந்தனர்; தோல்வி அடைந்தனர்; திரும்பிச் சென்றனர். இந்தச் சமயம் தான் பாரதநாட்டு அரசகுமாரன் சிஞ்ஜிப் நாட்டுக்குச் சென்றான். மன்னனைக் கண்டான். மன்னன் கூறினன். ''உன் நாடு பெருமை வாய்ந்தது. தோல்வியையே அறி யாதது. எம்மக்களுக்குப் புண்ணிய க்ஷேத்திரம் போன்ற இந்திய நாட்டைச் சேர்ந்த நீ தோல்வி என்னும் பெயரை உன் நாட்டுக் களிப்பதை நான் விரும்பவில்லை'' என்றான்.

பாரதநாட்டு ராஜகுமாரன் புன்னகை புரிந்தான். இளவரசி யின் இருப்பிடம் சென்றான். கண் கள் எங்கேயோ உத்தரத்தை நோக்கிட, கண்ணீரால் நனைக்கப் பட்ட ஆடைகளுடன், கண்ணீர் வெள்ளத்தில் மிதந்து, நீச்சலடித் துக்கொண் டிருந்தாள் இளவரசி.

''அரசி! சற்றே என்னைப் பார்!'' திரும்பவில்லை அரசி. பின்னல் சிஞ்ஜிப் மன்னன் வந்து நின்றான். தன்னுடன் கொணர்ந்திருந்த கண்ணாடிப் புட்டிகளில் ஒன்றை எடுத்தான் பாரத நாட்டான். அரசியின் மூக்கினருகில் கொண்டு சென்றான். மூடியைத் திறந்தான். குபீரென்று சிரித்தாள் தேவி. குலுங்கக் குலுங்கச் சிரித்தாள் தேவி. வாக்குப்படி மன்னன் பாரத ராஜகுமாரனின் உடைமை யாக்கினன் அவளை.

''என் நாட்டு மனநோய் நிபுணர் களால் ஹிப்னடைஸ் செய்யப்பட்டு அவள் தனது உளநோய் நிவர்த்திக் கப்படுவாள்'' என்று கூறிய வண்ணம் இளவரசியுடன் கப்ப லேறினன் இளவரசன்.

புயலொன்று எழுந்தது நடுக் கடலில். சின்னபின்னமாகியது மரக்கலம். ராஜதம்பதிகளை வர வேற்றான் சமுத்திர ராஜன்.

உறக்கத்தினின்று விழித்துக் கொண்டேன் நான். மடியிலிருந்த கெமிஸ்ட்ரிப் புஸ்தகம், 'நாளைக்கு உனக்குப் பரீக்ஷை' என்பதை அச் சுறுத்தி நினைவு மூட்டியது. பிரித்து வைத்திருந்த பக்கத்திலிருந்த 'நைட்ரஸ் ஆக்ஸைடு' என்ற வாயு வின் வரலாறும் தன்மைகளும் 'நானே உன் கனவின் பிரம்மன்' என்று உரையாடியது.

'கெமிஸ்ட்ரி பாடம் படு போர்' என்று யாரோ சொன்னார்களாம். எங்கே! இன்னும் ஒரு முறை சொல்லச் சொல்லுங்கள், பார்ப் போம்!

---

## வழி கண்டுபிடி!

கடலில் மூழ்கிப்போன நகைப் பெட்டியைத் திமிங் கலமும் பாம்பும் காத்துவரு கின்றன. அவைகளிடம் அகப் படாமல் அதை அடைய முயலுகிறான் முத்து. கடற் பாசிகளிடையே அவன் செல்ல வேண்டிய வழியைக் காண்பி.



# புல்தின்னுக் குதிரை

சம்பந்தம்

கிருஷ்ண தேவராயரின் குதிரைப் படையில் ஆயிரக் கணக்கான அராபியக் குதிரைகள் இருந்தன. யுத்தமில்லாத காலங்களில் அவைகளைப் போஷிக்க அதிகச் செலவாகிக்கொண்டிருந்தது. அதைக் குறைக்க ஏதேனும் வழி உண்டா என்று யோசித்தான் அரசன். ''ஏன்! வீட்டுக்கு ஒரு குதிரையைக் கொடுத்து வளர்க்கச் சொன்னால் போகிறது'' என்றார் மந்திரி.

''அதற்கான செலவை அவர்களையா ஏற்றுக்கொள்ளச் சொல்கிறது?''

''வேண்டாமே! மாத மாதம் அதற்காக ஒரு சிறு தொகை கொடுத்து வந்தால் போகிறது. இருந்தாலும் இப்பொழுது ஆகும் ஏராளமான செலவு ஆகாது அப்போழுது.''

''சரி. அவரவர் பணத்தை ஏப்பம் விட்டுவிட்டுக் குதிரையை நன்றாகப் போஷிக்கா விட்டால் என்ன செய்வது?'' என்ற சந்தேகத்தைக் கிளப்பினான் அரசன்.

''அதற்காகக் குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் குதிரையைக் கொண்டு வந்து நமக்குக் காட்டிவிட்டுப் போகும்படி ஏற்பாடு செய்துவிட்டால் போகிறது.''

''அது சரியான யோசனைதான்'' என்றான் அரசன்.

உடனே நகரம் முழுவதும் தண்டோரா போடப்பட்டது. அவரவர்கள் வளர்ப்பதற்காக ஒரு குதிரையைப் பெற்றுக் கொண்டு சென்றார்கள். தெனாலிராமனும் ஒரு குதிரையைப் பிடித்துக் கொண்டு போனான். அந்தக் குதிரை பார்ப்பதற்கு வெகு அழகாய் பளபளவென்றிருந்தது. ''தெனாலிராமன் மாத்திரம் எப்படியோ நேர்த்தியான குதிரையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு விட்டானே'' என்று மற்றவர்கள் பேசிக்கொண்டார்கள்.

ஆனால் அவனோ மாதமாதம் அரசாங்கத்திலிருந்து கிடைத்து வந்த பணத்தைத் தானே சாப்பிட்டு விட்டு, குதிரையைப் பட்டினி போட்டு வளர்த்தான். ஒரு சிறு கொட்டகை போட்டு, அதைச் சுற்றி ஐந்தடி உயரம் எழுப்பி அதனுள் குதிரையை விட்டு வளர்த்தான் ராமன். அந்தச் சுவரில் ஒரு பக்கத்தில் மாத்திரம் ஒரு துவாரம் உண்டு. தினம் அதன் வழியாகத்தான் ஒரு கைப்பிடி புல்லை உள்ளே நீட்டுவான். லபக்கென்று பிடுங்கிக் கொள்ளும் குதிரை.

---




வாத்தியார்: பள்ளிக்கூடத்தை விட்டதும் என்ன செய்யலாம்னு இருக்கே, ராமு?

ராமு: ரிடையராகலாம்னு இருக்கேன், ஸார்!



மூன்று மாதங்கள் முடிந்தன. குதிரையைக் கொண்டு வந்து காட்டும்படி அவரவர்களுக்கு உத்தர விட்டான் மன்னன். மக்களும் அப்படியே செய்தார்கள். ஆனால் தெனாலிராமனுடைய குதிரையை மாத்திரம் காணோமே!

உடனே கூப்பிட்டு விசாரித்தான் அரசன். 'பொல்லாத முரட்டுக் குதிரையாக இருக்கிறது அது. கிட்டே போனால் என் மேலேயே எகிறிக் கொண்டு வருகிறது. தயவுசெய்து குதிரைப் படைத் தலைவனையே அனுப்பி அழைத்து வரச் சொல்லுங்கள்'' என்றான் தெனாலிராமன்.

அவன் பேச்சைக் கேட்டு அரசன் வியந்தான். இருந்தாலும் அப்பொழுது அங்கே குதிரைப் படைத் தலைவன் இருந்ததால் தெனாலிராமனுடன் அனுப்பி வைத்தான். இருவரும் நேரே வீட்டுக்குச் சென்றார்கள். ''எங்கே அது? இங்கே காணோமே குதிரையை!'' என்று தன் தாடியை உருவிக்கொண்டே அவசரப்பட்டான் அந்த அதிகாரி.

''அதோ பாருங்கள், அந்தத் துவாரத்தின் வழியாய்'' என்றான் தெனாலிராமன். ''என்ன ஐயா இது! குதிரையை இப்படி வளர்த்தால் எப்படி ஆவது?'' என்று வெகுண்டான் அந்தத் தலைவன். ''கோபப்படாதிங்கோ, ஐயா. அதனுடைய முரட்டுத்தனத்துக்கு அஞ்சித்தான் அப்படி வளர்க்க வேண்டியதாயிற்று, தெரியுமா? இல்லாவிட்டால் நான் இப்படியா குதிரையை வளர்ப்பேன்!'' என்றான் ராமன்.

''சரி சரி. இதோ நான் பார்க்கிறேன்'' என்று மெதுவாய் அந்தத் துவாரத்தின் வழியாகத் தன் தலையை விட்டான் அந்த அதிகாரி. அதுவோ அந்தக் குதிரைக்கு வழக்கமாகப் புல் கொடுக்கும் நேரம்! அதனால் அவருடைய தாடியைப் புல்லென்று எண்ணி லபக்கென்று பற்றிக்கொண்டு விட்டது குதிரை. ''ஐயோ! ஐயோ!'' என்று அலறினார் அவர். குதிரை தன் பிடியை விடுவதாகவே காணோம்.

உடனே இந்தச் செய்தி அரண்மனைக்கு எட்டியது. அரசனும் மற்றும் சிலரும் உடனே ஓடி வந்தனர் அங்கே. அந்த அதிகாரியின் பரிதாப நிலையைக் கண்டு அவரவர்கள் பக்குவமாய் விடுவிக்க எப்படி எப்படியோ முயற்சி செய்தார்கள். முடியவே இல்லை. கடைசியில் கத்தரிக் கோல் கொண்டு வந்து அவர் தாடியை அடியோடு வெட்டி விடுவிக்க வேண்டியதாயிற்று. இத்தனை வருஷங்களாக வளர்த்து வந்த அவருடைய நேர்த்தியான தாடி கடைசியில் இப்படியா பாழாக வேண்டும்!

உடனே சுவரை இடித்துத் தள்ளினார்கள். உள்ளே எலும்பும் தோலுமாய் நிற்கக்கூட ஜீவனின்றி இருந்த குதிரையைக் கண்டு, அரசன் மிகவும் கோபித்தான். ''அரசே, இந்த நிலையிலேயே அது அவருடைய தாடியைப் பற்றிக் கொண்டு விட மறுத்தது. நான் இன்னும் அதைப் போஷாக்குடன் வளர்த்திருந்தால் என்னென்ன செய்திருக்குமோ? யோசித்துப் பார்த்தீர்களா?'' என்று தாழ்மையுடன் சொன்னான் தெனாலிராமன். அதைக் கேட்ட அரசனுக்குக் குபீர் என்று சிரிப்பு வந்து விட்டது. அதனால் அந்தத் தடவை தெனாலிராமன் மன்னிக்கப்பட்டான்.

## குழந்தைகள் தினம்



உலகமெல்லாம் ஒளிருகின்ற சோதி-எங்கள்
உள்ளமெலாம் கவருகின்ற சோதி!

திலகம்போல விளங்குகின்ற நேரு - அவர்
திருநாளே குழந்தைகளின் நாளாம்!

ஓடிவிளை யாடுகின்ற பாலர் - நாளை
உலகையாளத் தகுதிபெறும் சீலர்!

கூடுவர் பல்நாட்டுப் பாலர்இன்று-ஒரே
குடும்பம்போல உலகம் வாழும்நாளை!

அன்புகாட்டும் தூயஅகம் பெற்ற - பாலர்
அழகுவழி உலகமெலாம் கற்றால்

துன்பம் ஏது? துயரம் ஏது? தினமும்-ஒரே
சுகமளிக்கும் குழந்தைகளின் நாளாம்!

—தம்பி ஸ்ரீநிவாஸன்.


அதோ! ஹூம்! வேகம்
பாலத்தை விடுங்கள்!
யார் நீ?
புலிக்குட்டி, இளவரசியை நேரில் காணவேண்டும் என்று சொல்ல, கோட்டைக்காவலாளி அவனை உள்ளேவிட மறுக்கிறன்.....
இளவரசின் ஆப ரணங்கள் என்றால் எங்களிடம் கொடு! உள்ளே அனுப்புகி றோம்!
இளவரசியிடம் போய் பல்லவ வேங்கை என்று சொல்லுங்கள்!
சற்றுப் பொறுத்து ஒரு காவலாளி உள்ளே போய் வந்து கோட்டை மேல் நிற்பவனிடம் எதோ சைகை காட்ட, காவலாளி உடனே....
பாலத்தை கீழே விட்டு அந்த வீரனை உள்ளே வர விடுங்கள்!


அபராஜிதா உப்பரிகையின் மேலிருந்து புலிக்குட்டியின் வரவை எதிர்பார்க்க, அவன் தன் பஞ்ச கல்யாணிக் குதிரையில் கம்பீரமாக வருகிறான்........
ஆகா! எத்தனை சிறந்த வீரபுருஷன்!
இளவரசி! உன்னிடம் மன்னிப்புப் பெறவே நேரில் வந்தேன். நகைகள் இதோ இருக்கின்றன!
வீரரே! வருக! வருக!
யார் அங்கே?
தேவி! கட்டளையிடுங்கள்!
இந்த வேங்கை வீரர் நமது அதிதி. முதலில் அவர் களைப்பாறட்டும்!


இளவரசி! மன்னிக்கவேண்டும், உடனே நான் திரும்பிச்செல்ல விரும்புகிறேன்.
கூடவே கூடாது. இருட்டுகிற நேரமாகிவிட்டது காலையில் போகலாம்!
அபராஜிதாவின் தந்தை அபராஜித வர்மன் காஞ்சிக்குச் சென்றிருந்ததால், இரவு விருந்து நடைபெற்றதும், அரண்மனைக் காரியங்களை அபராஜிதாவே கவனிக்கிறள். அப்போது.
தேவி, ராட்டிர கூடத்து மல்லர்கள் பரிசில் பெற, காலைமுதல் தங்கள் பேட்டிக்காகக் காத்திருக்கிறார்கள். அநுமதிக்கலாமா?
அவர்கள் அரண்மனையில் இருக்கட்டும். காலையில்தான், பேட்டி எல்லாம்
அன்று இரவு . . . . . .
அபராஜிதா அழகிமட்டுமா? நல்ல அறிவும் உள்ள பெண்!

(தொடரும்)

# பாலர் கவி அரங்கம்



## என்னுடைய பேனா

அழகான பேனாதான் அதற்கேற்ற மூடிதான்
இதனுடைய வேலை எல்லாம்
கிறுக்குதல் ஒண்ணேதான்! (அழகான)

ஈடில்லா வண்ணம்தான் கண்ணைத்தான் பறிக்குது
எவரேனும் எழுத வந்தால்
கையெல்லாம் ஒட்டுமே
கையெல்லாம் ஒட்டுமே ஓ.... (அழகான)

நெக்குதான் ஒடிந்தது நிப்புதான் வளைந்தது
இதனாலே பயனெல்லாம்
ஓயாத தொல்லைதான்
நீங்காத தொல்லைதான் ஓ.... (அழகான)

இங்கொஞ்சம் ஒழுகுது அங்கொஞ்சம் ஒடிந்தது
பரீட்சைக்கு எடுத்துச் சென்றால்
தாளெல்லாம் வீணாதான்
கையெல்லாம் இங்க்தான் ஓ.... (அழகான)

இணைஇல்லாப் பேனாதான் என்னுடைய பேனாதான்
எவருக்கும் ஐயம் என்றால்
வந்துதான் பாருமே
வந்தேதான் பாருமே ஓ.... (அழகான)

ந. சுகந்தம், திருச்சிராப்பள்ளி-2,

# ஆகாயமும் பூமியும்

**மேரியண்ணு**




உருண்டையான இந்தப் பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு, சூரியனையும் சுற்றி வருவதால் இரவு பகல் உண்டாகிறதல்லவா?... உங்களுக்குப் 'பூகோளப் பாடம்' சொல்லித் தர வரவில்லை நான். அப்படிப் பூமி சுற்றுகிற காரணத்தால் - அதன் ஒரு பாகத்தில் பகலும், மறுபாகத்தில் அதே சமயம் இரவும் ஏற்படுகிறது. அதாவது வட தென் அமெரிக்காக்களில் இருட்டென்ருல் ஆசிய ஐரோப்பிய நாடுகளுக்கு அது பகல்நேரம் என்பதும் நீங்கள் அறிந்துள்ள விஷயம்தான்.

ஒரு சமயம்—பால் நிலா, தன் தண்ணொளியை பரப்பிக் கொண்டிருந்தாள் அமெரிக்க நாடுகளிலே. இரவு நேரத்தின் ரம்மியமான வேளை அது; தூய நிலவின் பிரகாசம் உலகின் ஒரு பாகத்தை ஜகஜ்ஜோதியாக்கிக்கொண்டிருந்தது.

மனத்துக்கு ஆறுதலை தரக்கூடிய சந்திரனின் அந்த ஆனந்த ஓட்டத்தை—ஆகாயத்தின் மறுகோடியிலிருந்த சூரியன் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தான். தனது சகோதரி 'நிலவு' ஒய்யாரமாக உலவும் ஒப்பற்ற காட்சி சூரியனது உள்ளத்தில் பெருமிதத்தை உண்டுபண்ணிவிட்டது. எழில் 'நிலவாள்' உடுத்திருந்த நீலநிறச் சேலையிலே நட்சத்திரங்கள் வைரங்கள் வைரங்களாக ஜொலித்துக்கொண்டிருந்தன.

அடடா! ஆதவனின் ஆனந்தம் அதிக நேரம் நீடிக்கவில்லை. எங்கிருந்தோ 'எம'க் கூட்டம்போல் கரியமேகங்கள் விரைந்தோடி வந்து வெண்ணிலவை மறைத்துக்கொண்டன.. அவ்வளவுதான்.... இருள்! இருள்!

நேர்த்தியாகப் பவனிவந்த சந்திரனைப் பாவிகளாம் மேகங்கள் பலியாக்கிக் கொண்டதை, பார்த்துக் கல்லாய் நின்றிருந்த சூரியனின் கண்கள் குளமாகிவிட்டன. அழுதான். ''சகோதரி - வீணர்களால் விழுங்கப்பட்டாளே!'' என விம்மித் துடித்தான் பகலவன்.

இந்தச் சம்பவம் நடந்து அநேக நாட்களாகிவிட்டன. இன்று—சூரியன் தன் வெப்பக் கதிர்களை எவ்வளவுதான் ஆசிய நாடுகளிடையே அழுத்தியும், மேக வீரர்கள் திரைபோல் குறுக்கிட்டதால் மக்களை, மாடமாளிகைகளை அவனுல் காண முடியவில்லை. எவ்வளவோ போராடிப் பார்த்தான்.. கடைசியில் கொஞ்சம் தலை தூக்கி உலகினைப் பார்க்க இடம் தந்தனர். அப்போது சூரியனின் கண்ணுக்கு முதலாகப் பட்டது 'முழுமதியாள்'



தான். 'நிலவு'க் கொள்ளை அழகோடு பூமியின் மறுபாகத்தை ஜோதிமயமாக்கிக்கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் சூரியன் அசந்து போனான்!

அன்று சந்திரனை மேகங்கள் மறைத்துவிட்டதற்காகச் சூரியன் எப்படி அழுதான்? சகோதரியின் நிலைக்காக அவன் விட்ட கண்ணீர்தான் எவ்வளவு? எல்லாம் வீண்!

இன்று நிலவு சூரியனின் நிலைமைக்காகத் துளியேனும் சோகப்படவில்லை.. மேகக்கூட்டம் தனது சகோதரனை முற்றுகையிட்டு வளைத்துக் கொண்டதற்காகக் கண்ணீர் விடவே இல்லை. கண்ணீர்விட வேண்டாம். 'சந்திரன்' சும்மாவாவது இருந்தாளா? 'கலகல'வெனச் சூரியனைக் கண்டு சிரித்தாள். அவளது ஏளனமான அந்தச் செய்கை சூரியனை ஈட்டிபோல் குத்தியது. அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.. "ஏய், சந்திரா..நான் துன்பத்தால் துடிக்கிறேன். மேக பாதகர்களால் மறைக்கப்பட்டுக் கண்ணீர் வடிக்கிறேன். நீ ஏன் சிரிக்கிறாய்? எனது வேதனை உனக்கு வேடிக்கையாக இருக்கிறதா?" என்று வாய் வலிக்கத் திட்டிக் கொட்டினான்.

ஆனால் 'நிலவு' கைதட்டி மறுபடியும் கலகலத்தாள். "அண்ணா.. ஏன், இப்படி ஆத்திரப்படுகிறாய்? உனக்குத் துன்பத்தைச் சுமக்கிற சக்தி போதவில்லை: இதோ பார், என்னை மேகங்கள் மறைக்கும்போது நான் அழுவதுமில்லை; ஆத்திரப்படுவதுமில்லை. துன்பம் நிலைத்ததா, அண்ணா! இல்லையே. விரிந்த ஆகாயத்தைப் போல இன்பங்கள் நிறைந்து கிடக்கின்றன. அவ்வளவையும் நாம் சுவைக்கும்போது—சிலமணி நேரம் காற்றுப் பட்டதும் கரைந்தோடும் மேகத்தைப் போன்ற துன்பத்துக்காகக் கவலைப்படுவது முட்டாள்தனம்..'வெயிலின் அருமை நிழலிலல்லவா தெரியும்?' என்பார்களே மனிதர்கள். அதைப்போல 'துன்பத்தின் தன்மையைச் சுகத்திலேதான் அறிய முடியும்'—அதிலும் அண்ணா, வேதனையான சமயங்களில் சிரித்துத்தான் ஆகவேண்டும். அப்போதுதான் துயரத்தை விரட்ட இயலும்" என்று சொல்லி முடிப்பதற்குள், அவளது தங்க மேனியைப் பயங்கர மேகக் கூட்டம் ஒன்று வந்து திடீரென மறைத்துவிட்டது. ஒளி பரவியிருந்த இடமெல்லாம் இருள் சூழ்ந்து போயிற்று!

இத்தனை நேரம் சந்திரனை எட்டி எட்டிக் கவனித்துக்கொண்டிருந்த சூரியன், இப்போது பூரணமாக விடுதலை பெற்றான். அவனைச் சூழ்ந்திருந்த துன்பம்—மேகம்—விலகி ஓடிக்கொண்டிருந்தது. எல்லையே இல்லாத ஆகாயம் அவனுக்கு இன்ப வாழ்த்துப் பாடியது. சூரியன் உலகத்தோரைப் பார்த்தான். அவன் வாய், "மனிதர்களே, வாழ்வாகிய பிரயாணத்தில் மேகமாம் துன்பம் சில நேரம்தான், தெரிந்து கொள்ளுங்கள்!" என்றது.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

காந்திபுரம் (கோவை ஜில்லா)
உபதலைவர்: G. கண்ணன்
காரியதரிசி: G. சுப்பராவ்
பொருளாளர்: R. குருராஜன்

பத்துப் பேர்கள் செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'கண்ணனின் நண்பன்' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் வாசகசாலையும் நடத்தப் படுகின்றன.

திரிகோணமலை (இலங்கை)
உபதலைவர்: ஹென்றி ராசு
காரியதரிசி: தா. சுப்பிரமணியம்
உபகாரியதரிசி: தா. எஸ். பிரான்ஸிஸ்
பொருளாளர்கள்: மா. வில்வராசா, என். யோகராசா

கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழா சமீபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புதிய நிர்வாகிகள் மேல் கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 'மிதி' என்ற கையெழுத்துப் பத்திரிகைக்கு விஷயதானங்களை ஹென்றி ராசு, 25/5, ஜெயில் ரோடு, திரிகோண மலை (இலங்கை) என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

**திருநெல்வேலி** கண்ணன் கிளைக் கழகத்தின் சார்பில் மணி மலர் மன்றச் சிறுவர்கள் கண்ணனில் வெளியான 'பரீட்சை முடிவு' என்ற நாடகத்தைச் சிறப்பாக நடித்துக் காண்பித்தனர். விழாவுக்குத் தலைமை தாங்கிய தாசில்தார் உயர்திரு எஸ். ரகுநாதாசாரியார் அவர்கள் நடிகர்களுக்குப் பரிசு வழங்கினார்.

# பேனா நண்பர்கள்

1. M. P. வேங்கடேசன், 32. ஆவாரங்காட்டுத் தெரு, திருவண்ணாமலை. (வ. ஆ.)
2. A. மரியநாதன், கடைத் தெரு, ஆனைதாண்டவபுரம், தஞ்சை ஜில்லா.
3. ரவீந்திரநாத் பாரீக், 45, தெற்கு ஆவணி மூலத் தெரு, மதுரை.
4. C. K. பஞ்சாபகேசன், 5-ஆம் படிவம். R. R. ஹைஸ்கூல், ஆத்தூர், செங்கல்பட்டு ஜில்லா.
5. K. ராஜாராம், உலகநாயகி தெரு, கொத்தமங்கலம், ராமநாதபுரம் ஜில்லா.
6. P. K. புயல்வண்ணன், 7, குட்ஸ்ஷெட்டுத் தெரு, மதுரை.
7. D. ஜோசப், 19, சேணியர் கிழக்குத் தெரு, காரைக்குடி.
8. V. மகாலிங்கம், 319, ராஸ்தாபேட், புனா-2.
9. M. K. கணபதி, அசோகா மாணவர் ஹாஸ்டல், கண்டி.
10. மீ. ரா. குமாரசாமி, கந்தவனம், வல்வெட்டித்துறை, இலங்கை.
11. கலைமணி, 46, அம்பகாமுவ ரோடு, நாவலப்பிட்டியா, இலங்கை.
12. A. R. ராமநாதன், 47, மாகலிஸ்டர் ரோடு (Mecalister Road), பினாங்கு, மலாயா.

# திருத்தம்

15-9-56 இதழில் பேனா சிநேகிதிகள் பகுதியில் வெளியிட்டிருந்த (1) M. ஜானகி (2) S. சத்தியபாமா, சேதுபதி ஹைஸ்கூல், மதுரை என்ற விலாசங்களை விலக்கிவிடும்படி அவர்களே கேட்டுக்கொண்டுள்ளனர்.

(Regd. as Newspaper in Ceylon.) **Reg. No. M. 554.**


# நீங்கள் வாங்கிவிட்டீர்களா?

## கண்ணன் புதிய வெளியீடுகள்

**லீடர் மணி** - ஆர்வி ரூ. 1 80

இளைய தாயாரின் கொடுமைகளுக்கிடையே கிராமத்தில் பள்ளிப் படிப்பை முடிக்கிறான் மணி. மேலே படிக்கப் பக்கத்து நகரத்திலுள்ள அத்தை வீட்டுக்குச் செல்கிறான். அங்கேயும் அவர்கள் கொடுமை தாங்காமல் நடு இரவில் வெளியேறிவிடுகிறான். வழியில் நண்பனாக வரும் கங்கன் ஆசை காட்டி அவனைச் சென்னைக்கு அழைத்துச் சென்று நடுத்தெருவில் விட்டுச் செல்கிறான். பலவித இன்னல்களையும் சமாளித்தவாறே விடாமுயற்சியுடன் நன்றாகப் படித்து வெற்றி பெறுகிறான். லீடர் பட்டம் பெற்ற அவனை விமான நிலையத்தில் வரவேற்கிறார்கள். படிக்கப் படிக்கத் தெவிட்டாத கதை. சுவையான சம்பவங்கள். சிறுவர் ஒவ்வொருவரும் படித்து அநுபவிக்க வேண்டிய ரஸமான நாவல்.

**அசட்டுப் பிச்சு** - 'ஆர்வி' ரூ. 1 00

ஏ. பி. என்ற பையனை ஊரில் உள்ள மற்ற நண்பர்கள் அசட்டுப் பிச்சுவாக்கி விடுகிறார்கள். அவன் நடையும் உடையும் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால் அவன் அதிருஷ்டமோ அளவிட முடியாமல் இருக்கிறது. பெரிய பெரிய திருட்டுக்களையெல்லாம் அநாயாசமாகக் கண்டு பிடித்து விடுகிறான் அவன். பெயரும் புகழும் அவனைத் தேடி வருகின்றன. அடுக்கடுக்கான சம்பவங்களும் அழகான சம்பாஷணைகளும் நிறைந்த அருமையான கதை.

**அபாயச் சங்கு** - நீலம் ரூ. 0 80

விஷமக் கொடுக்கான ரகுவை, பட்டணத்துக்கு அனுப்பினால் அடங்கிவிடுவான் என்று நினைக்கிறார்கள். ஆனால் புறப்பட்ட ரெயிலிலேயே முதலில் தன் கைவரிசையைக் காட்டுகிறான் அவன். பள்ளிக்கூடத்தையே இரண்டு செய்கிறான். அவனைக் கண்டால் தெருவே நடுங்குகிறது. சுவாரஸ்யமும் விறுவிறுப்பும் நிறைந்த கதை.

அடுத்து வருபவை: கவிஞர் வரிசை, தங்க மாம்பழம்

**கலைமகள் காரியாலயம், சென்னை-4.**